உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 17 | பராபவஹு புரட்டாசித் திங்கள் 1ம்உ [17–9–66] | இதழ் 9

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 4)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

"கல்வியே கற்புடைப் பெண்டிராப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச் — சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவையை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு."

(சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் புத்துரைப் பாடம்.)

கல்வியே கற்புவாய்ந்த கிழத்தியராகவும், தீங்கவியே அக் கிழத்தியர்க்குச் செல்வங்களாய நற்பண்பு, நற்செயல் முதலிய வற்றைப் பெற்ற மைந்தனுகவும், அத் தீங்கவியுள் அமைந்த

சொல்வளமே பொலிவையுடைய செல்வமாகவும், (கொண்டு) நல்லவையை அழகுறச் செய்யும் செல்வமும் சிலர்க்குண்டு.

சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் பதிப்பில், உபக்கிர மணிகையாக எழுதிய உரையிலுள்ள சில இவை:- இவற்றை முன்னரே தெரிவிக்க வேண்டும். இப்போதுதான் இது கிடைத்தது.

"திருநெல்வேலியைச் சேர்ந்த ஸ்ரீவைகுண்டம் என்னும் நகரிலே அவதரித்துக் குமரகுருபர சுவாமிகள் என்னும் பெயர் பெற்ற ஒரு முனிவர் பல நூல்கள் செய்து வைத்தனர். அவையெல்லாம் சொற்சுவை பொருட் சுவைகளோடு கற்ருேர்க்கு மகிழ்ச்சி பயக்குஞ் சம்ஸ்காரமு முடையன.

இவர் மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலிய சில பிரபந்தங்களை மதுரையிலே கொண்டுவந்து சுவாமி சந்நிதியிலே அப்பொழுதை யரசனுகிய திருமலை நாயக்கனும் பிறரும் கேட்க அரங்கேற்றி அவ்வரசனுலே சம்மாநமும் பெற்றவராய் அங்கேயிருக்கும் நாள்களிலே ஒருநாள் அவ்வரசன் உணவின்றி நெடுநேரம் இருத்தல் கண்டு,

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது."

என்னுந் திருக்குறட் கவியை எடுத்துக் கூறினுர். அதனைக் கேட்ட அவ்வரசன் அதிசயம் அடைந்து வள்ளுவருடைய திருக்குறளின் அருமை பெருமைகளை உள்ளவாறு அறிந்து, அதன் சாரத்தை யெடுத்துச் சுருக்கி ஒரு நீதி நூலாக்கித் தரவேண்டுமென்று பிரார்த்திக்க இந்நூலைச் செய்து கொடுத்தார்.

வள்ளுவருடைய திருக்குறளிலே ஆங்காங்கு வரும் சொற்களும், சொற்றெடர்களும், பொருள்களும், இரீதிகளும் இந்நூலினும் ஆங்காங்குவருகின்றன.

அவ்வாறு வருஞ் (1) சொற்களாவன:— ஊங்கில்லை, இவறன்மை, கடப்பாடு, பிறன்வரை என்பன முதலாயின.

(2) சொற்றெடர்களாவன:- பரிந்தோம்பிக்காக்க, நோவதெவன், அறங்கடை, உய்த்துச்சொரிந்து என்பன முதலாயின.

(3) பொருள்களாவன:- கல்வி, அரசு, அமைச்சு, முயற்சி, பொருள், இன்பம், மெய்யுணர்வு என்பன முதலாயின.

(4) இரீதிகளாவன:- பித்துடையவல்லபிற, தாழப்பெறின், எண்மையவாயினும் எனபன முதலாயின.

இவைகள் இங்கும் அங்கும் இலைப்புரைகிளைப்பார்க்கு நன்கு புலப்படுவனவேயாம்.

இந்நூலிலே எம்மதவாதிகளாயினும் சம்மதமாகச் செய்தற் பாலனவாகிய காரியங்களும், தவிர்தற்பாலனவாகிய காரியங் களும், அவற்றின் பலாபலங்களும், அவைகளை உள்ளவாறு உணரும் நெறியும், உணர்வோர் செய்யுந்திறமும், ஊரார் செய் யுந்திறமும், பிறவும் அநுபவங்களோடு உதாரணங்கள் காட்டிச் சுருங்கச் சொல்லல் முதலிய அழகுகளெல்லாம் பொருந்த வெண்பா யாப்பிலே பண்பாக விளக்கப்பட்டன. இவையெல் லாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் பயப்பன வாயடங்கும்.

முதற்பாகத்திலே கல்வியாலடையப்படுவனவாகிய பயன், சுகம், புகழ், அறிவு, ஒழுக்கம் முதலியன கூறுமுகத்தால் அறமும், அதன்பின் அரசு, அமைச்சு, முயற்சி, பொருளீட்டும் நெறி முதலியன கூறுமுகத்தாற் பொருளும், பரதாரம் விரும் பாமை, கற்புடை மனைவியின்பம் முதலியன கூறுமுகத்தால் இன்பமும், அதன்பின் துறவு, தவம், மெய்யுணர்வு முதலியன கூறுமுகத்தால் வீடும் ஆக நான்கு பொருள்களும் இந்நூலிலே நன்கு கூறப்பட்டிருக்கின்றன.

மாநுடரால் அவசியம் அடைதற்பாலனவாகிய அறம், பொருள் முதலிய நான்கையும் திறம்பெறக் கூறும் இந்நூலை யாவர் விரும்பாதார்?

ஆதலால், இந்நூல் தமிழ்நாட்டு வித்தியாசாலைகளிலே தவிராது கற்பிக்கப்படத்தக்க ஒரு நீதிசித்தாந்த நூலேயாம். இதுவும் பெரும் பாலும் உரைகொண்டே உணரத்தக்கது. எத்தனையோ கவிகள் உய்த்துணர்தற்பாலனவாய்ச் சூத்திரம் போலவும் தோற்று கின்றன. இவ்வாறே இந்நூலாசிரியர் தாமும் உய்த்துணர

வைத்தல் கருதியே நாலாங்கவியிலே, 'எத்துணைய வாயினுங் கல்வி இடம் அறிந்து உய்த்துணர்வு இல் எனின் இல்லாகும்' எனக் கூறினர் போலும்.

இந்நூற்கு மிகப்பழைய ஒரு தாலபத்திரப் பிரதியும் ஒரு முத்திராக்ஷரப் பிரதியுமாக இரண்டு உரைப் பிரதிகள் அகப்பட்டன. இரண்டு பிரதிகளையும் யாம் அநுசீலநம் செய்தபோது பல சொற்களும், பல சொற்றொடர்களும், பல கவிகளும் விபரீத உரைகளை யுடையனவாகத் தோன்றின. அவற்றுட்சில அவர் பதிப்பிற் காட்டப்பட்டன. படவே யாம் அப்புலவர் கொண்ட பாடமே கொண்டு இக்கட்டுரையை எழுதுகின்றேம். 'அப் பெண்டிர்' என்பதும் 'மாணவை' என்பதும் பாட பேதம். மற்றவை எப்பதிப்பிலும் அபேதமே. 'தீங்கவி' என்பது மிக்க பொருத்தம் உடைத்து. ஈர்ங்கவி எனல் சிறவாது. "தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்" என்று கம்பர் வான்மீகியார் வண் கவியைச் சிறப்பித்ததலைக் கவியில், 'தீங்கவி' என்றே குறித்ததறிக. 'செய்யுளினிமை' என்பதற்கேற்பத் 'தீங்கவி' எனலே சாலும். 'தென்னுண்டேனிற் றிஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்' என்றும் கம்பர் விளக்கியவாறும் காண்க.

சொல்லாழ்ச்சி, பொருளாழ்ச்சி, சொல்வைப்பு, பொருள் வைப்பு, சொல்லின்பம், பொருளின்பம், சொற்றிண்மை, பொருட்டிண்மை; (சொல்லாழம் பொருளாழம்), சொற்சுவை, பொருட்சுவை என்று பரஞ்சோதி முனிவர் அருளிய எல்லாம் உடைய கவியே தீங்கவியாகும். தீங்கவியாவது சீரிய கூரிய தீஞ்சொல் வவ்வியதும் செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளுடையதும் ஆகும் என ரத்நசங்கிரகமாகக் கம்பர் கூறினர்.

"செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய
தீஞ்சொல் வவ்விய கவி"

என்பது நகரப்படலத்து முதற்கண்ணது.

'சொல்வளம்' அக் கவியுள் அமைந்த சொற்களின் சிறப்பு. இஃது ஆறன்றொகையாக் கொண்டுரைத்த உரை. வினைத் தொகையாக் கொண்டு கற்றவர் தம்மாணுக்கர்க்கும் அவர் போலப் போந்து ஐயம் அறியாமை முதலியவற்றைப் போக்கிக்

கொள்ள விழைவோர்க்குஞ் சொல்லும் வளம் என்றுருமுளர். அது சிறவாது. பாடஞ் சொல்லும் வளத்தைக் கூறுந்தொடர்பு ஈண்டில்லை. கல்வியும், அக்கல்வியாற்றோன்றுங் கவியும், அக் கவியுளமைந்த சொல்லின் வளமும், அச்சொல்வளமுடைய கவியால் அவையை அழகுறுத்தும் ஆற்றலும் தொடர்புள்ளன. பாடஞ் சொல்லும் வளமோ கல்வியாலாய கவியொடு தொடர்புடைய தன்று. 'சிலர்' எனவெளிப்படையாயும் பலர்எனக் குறிப்பாயும் இக்கவியுள் வைக்கப்பெற்ற புலவர் (பாவலர், நாவலர்) சொல்லும் வளம் எனக் கற்றாரொடு தொடர்புடையது. பாடஞ் சொல்லுதல் கற்றார் தொழில். அஃது இக்காலத்தில் கல்லார் தொழிலாய் விட்டமையால், இத்தொடர்பு விளங்குதலரிதே.

கற்றுவல்ல பாவலர்க்குக் கல்வியே பெண்டிர். அக் கல்வியால் இயன்ற தீங்கவியே அவர்க்கு அப்பெண்டிர்பால் தோன்றிய செல்வப் புதல்வன். அக்கவியுள் அமைந்த சொல் வளமே அப்புதல்வனுக்கு அவனப்பனாகிய பாவலன் எச்சமெனச் செய்த மல்லல் வெறுக்கை. மல்லல் – பொலிவு, வெறுக்கை – பற்றற்றோரால் வெறுக்கப்படும் பொருட் செல்வம் முதலியன. "அந்தணர் வெறுக்கை" என்றவழிப் பொதுமையிற் செல்வமென நின்றது. "வெறுங்கையா ரென்னுஞ் சொல்லின் மென்மையை வன்மை செய்யும்" என்று சேது நாட்டுச் செல்வரியல் புணர்த்திய நிரம்பிய வழகு கற்றோர் கண்டிருப்பர்.

இப்பெண்டும் பிள்ளையும் பொருளும் பலர்க்கு இருக்கலாம். மாணவையை மண்ணுறுத்துஞ் செல்வமோ, சிலர்க்கே உண்டு. "கல்வியைச் செவ்வே கற்று நல்லிசையோடு சொல்வலியும் அமையக் கவிசெய்யும் வன்மை எல்லார்க்கும் கிடையாது என்பது கருத்து" என்று இருமொழிப் பெரும் புலவரும் புலமைக் குத்தக்க பெருந்தகைமை உற்று விளங்கியவரும் ஆகிய புகழுடலில் விளங்கும் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் பிள்ளை எழுதியது ஈண்டு நோக்கத்தக்கது.

"புகழும் பொருளும் பிறவும் பெற்று மேம்படுதற்குக் காரணமாதல் பற்றிக் கல்வியே கற்புடைப் பெண்டிர் எனவும் சித்திரித்துச் சவையிலே வைக்கப்பட்ட பொருள் பார்ப்பவர் மனத்தைக் கவர்ந்து சிறப்பித்தல் போல நற்கவிஞரும் கற்றோர்

மனத்தைக் கவர்ந்து சிறப்பித்தல் பற்றி மாணவையை மண்ணு றுத்தும் எனவும் கூறினர்'' என்பதும் அப்புலவர் கோமானு ரையே. அவையினியலைப் பாட்டியல்களிற் காண்க.

'கல்வியே' என்றவாறு தீங்கவியே என்றும் சொல்வளமே என்றும் ஏகாரச் சார்புற்றிருத்தல் முறையாகும். தீங்கவியே புதல்வனு என்றும் சொல்வளமே வெறுக்கையா என்றும் நின்ற வாறே கல்வியே கற்புடைப் பெண்டிரா என்றிருப்பதே முறை. அப்பெண்டிர் எனச் சுட்டித் தெரிந்து கொள்ளத்தகும் இன்றியமை யாமை ஆண்டில்லை.

கணவனும் மனைவியும் உடம்பும் உயிரும் போல ஒருவரை யொருவர் இன்றியமையாதவர். கற்றேனும் கல்வியும் அன்னர். ஒருமையிற் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து. அக்கல்வி போலும் கற்புடைப் பெண்டிரும் எழுமையும் ஏமாப்புடையரே. நளாயினி சரித்திரம் இதற்குச் சான்று. கற்புடைப் பெண்டிர் சரித்திரம் ஒன்றிரண்டுதான் கிடைக்கும். நிறையக் கிடைப்பிற் குறையைத்தான் காட்டும்.

கணவன், மனைவியின் கற்புவழி நிற்றலை யுடையன். இதற்கு மாணிக்கவாசகப் பெருமானுர் திருக்கோவையாரில், "கமலங்கலந்த வேரியுஞ் சந்தும் வியல் தந்தென'' (தாமரைப் பூவைச் சேர்ந்த தேனும் சந்தன மரமும் இடத்து நிகழ்பொருளும் இடமும் ஆய் இயைந்து தம் பெருமையைப் புலப்படுத்திறுற் போல இயைந்து) என்று ஒப்புணர்த்தியருளினர்.

கசடறக் கற்றவர் தாம் கற்ற நூல்களில் உணர்ந்தவற்றின் வழிக்குத்தகநிற்பர். கணவன் கற்புடைப் பெண்ணின் கற்புவழி நிற்றலை யுடையன். 'வழிபாடு கூறல்' என்னும் அகத்தினைப் பாடற்றுறையின் பொருளை அறிந்து கொள்ளின் இது நன்கு விளங்கும். இது பெண்வழிச் சேறலன்று. 'காவலர்கற் பின் நிற்பர்' என்ற திருக்கோவையார் பகுதியில் திருக்கோடின் இது விளங்கும்.

கற்புடைப் பெண்டு கணவனை யொழிய வேறு ஒரு தெய் வத்தையும் தெய்வமாகக் கருதாள். கணவனைக் கணவனுகவே கருதாதாள் அம்மட்டும் நின்றுற் போதும். நாயே பேயே

கழுதையே என்று வைவோள் அவையே அவன் என்று கருதித் தான் வைவாள். அப்பொழுது தானும் அவற்றின் பெண்மையுள் ஒன்றெனக் கருதாத அவட்குத் தெய்வமாகக் கருதும் ஆற்றல் ஏது? ஆடவரும் தம் பெண்டிர்க்கு இப்பட்டம் அளிப்பு விழா, சில வீட்டில் நிகழும். அவரும் அன்னரே.

கற்புடைப் பெண்டிர் போலக் கல்வியும் தன்னைக் கற்றவனை இன்புறுத்துவதல்லது மற்றவனை இன்புறுத்தாது.

"ஆனந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோன்அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றுது முற்றுதிவ் வணிநலமே"

எனக் கலவியின்பங் கூறும் தீங்கவி, கற்புடைப் பெண்டிரால் கற்றவனாகிய கணவனுக் குண்டாகும் கல்வியின்பத்தையும் ஒப்பாற் செப்பாநிற்கும் உண்மையை ஓர்ந்துணர்தல் வேண்டும். கற்றவுயிர் வேறு, அவ்வுயிர் கற்ற கல்வி வேறு, அக்கல்வியால் விரிந்த அறிவு வேறு, அவ்வறிவின்கண் விளையும் இன்பம் வேறு என்று பேதம் உள்ள மட்டும் இம்மெய்யின்பம் விளையாது.

கல்வியையும் கேள்வியையும் நொந்து வெறுத்துக் கடியும் நிலையையும் சிற்சிலர் எய்துவர். கற்புடைப் பெண்டிரை அவ்வாறு செய்யார் அறிஞர். அறியாமை சிறிதேனும் இருப்பின் அன்றிக் கல்வி கேள்விகளில் வெறுப்புண்டாகாது.

"புல்லென் யாக்கைப் புலவுவாய்ப்பாண" என்னும் பெரும்பாணாற்றுப்படை (22) அடிக்கு நச்சினார்க்கினியார் உரைத்த பொருளையும், "சில் செவித்தாகிய கேள்வி நொந்து"என்ற புறத்தினடியையும் "அடகெடுவாய் பல தொழிலும் இருக்க" எனத் தொடங்குந் தனிப் பாடலையும் இங்கு எண்ணின், கல்வியைக் கற்புடைப் பெண்டிராகக் கொண்டவரல்லர் அவரும் அவரன்னோரும் எனல் தெளிவுறும். செல்வப் புதல்வரைப் பெற்றுச் சிறக்க வாழும் புண்ணியருமல்லர் அவர். பிள்ளையில்லாதார் உறும் வருத்தம் போல்வதே அவர் வருத்தம்,

"பசிப்பிணி யென்னும் பாவி" "குடிப்பிறப்பழிக்கும் விழுப் பங்கொல்லும் பிடித்த கல்விப் பெரும்புணைவிடுஉம் நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்" என்ற சாத்தனுர் பாத்தனுல், தமிழைச் சனி யென்றும் கல்வி கேள்விகளை வெறுத்தும் நின்ற அக்கவிப் பிள்ளை பெருதவர் கட்கு அக்கல்வி முதலிய வற்றில் உண்டான வெறுப்பின் காரணம் கூறப்பட்டது. "கேடில் விழுச்செல்வம் கல்வி" "மற்றையவை மாடல்ல" என்ற பொய்யாமொழிப் பொருளை மெய்யாக் கொண்டு பிழைக்கத் தெரியாது பசியால் மிகவருந்தி தாம் கற்ற கல்வியையும் உற்ற கேள்வியையும் வெறுத்தனராயின், அவவெறுப்புக்குக் கல்வி ஏதுவாகாது.

கல்வியே யில்லாதார் தாமே கல்விக்கு அதிதேவதை யென் றெண்ணியும், கவியினியல்பைக் கனவினும் கருதாது கண்ணிற் கண்டபடியும் கருத்திற் கொண்டபடியும் வாய் விண்டபடியும் கவிபோல் எழுதியும் வெளியிட்டும் பண்டைய கவிஞர்களை இகழ்ந்தும் தம்மைத்தாமே புகழ்ந்தும் காசு கொடுத்துத் தூசு போர்த்துவித்துக் கொண்டும் இனிது பிழைக்கும் உத்தமோத் தமர்களை அணுகிப் பிழைப்பதெப்படியோ எனவினவித் தெரிந்து கொள்ள, அக்காலத்தில் இப்படிப்பட்ட உத்தமோத்தமர்கள் இல்லைபோலும். இக்காலக் கவிஞர்களுக்கு வேண்டாதனவாய் விட்டபடியால், தொல்காப்பியச் செய்யுள் விளைவில்லை. அருங் கலக்காரிகையும் பெருங்கலம் இழந்தாள். வித்துவான்கள் தலை யெழுத்தைத் தேர்தற் பொருட்டுக் களைபறிக்கக் காரிகை செய்யுட் புகுகின்ருள். புகினும் பற்ருக்குறையே வளர்கின்றது. பற்ருதது யாது? உள்ளத்தில் உணர்வு, உலகில் உணவு. உணர் வின் பற்ருக்குறை தீரவேண்டிற் பழங்காலக் கல்வி முறையை யொட்டிய பள்ளியும், உணவின் பற்ருக்குறை தீரவேண்டிற் கடவுள் நிலைகளான கோயில்களும் மடங்களும் திருவருட் கடல்கள் என்று எண்ணியும் கள்ளத்தன்மையிற் கொள்ளை யடிக்கும் அழிபொருட்கிடஞக எண்ணுதும் உயிர்க்குறுதுணை யையே நாடித்தேடும் உண்மையன்பும் வேண்டும். அற நெறியும், அறிவும், அறிவுக்குத்தக்க நல்லொழுக்கமும், அருள் பெறுவேட்கையும், ஆண்டவன் திருவடி ஆராதனையும், அறி வோடுவளரும் அன்பும் அடியொடு போயின, பற்ருக்குறை

எற்றால் ஒழியும்? அவை உற்றால் அன்றி ஒழியாது. எல்லாத் துறையிலும் அறியாமையே பெருகி நாட்டில் துன்பத்தை மிகுக்கின்றது. அறியாமை உள்ளவரை துன்பமே உறும். அறிவு வளர வளர இன்பமே மிகும். மடங்கொல்லும் தொடக்கத்தில் துன்பமும் மடங்கொன்று அறிவகற்றும் போதெல்லாம் இன்பமும் உண்டாகும். கற்கத் தொடங்குங்கால் துன்பந் தருவது யாது? அறிவின்மையே. தொடங்கிக் கற்று உணருந் தோறும் உணருந்தோறும் இன்பம் பெருகிவரும். அவ்வின்பந் தருவது யாது? உணர்வே. இதனை முன்னைக் கட்டுரையிற் கண்டறிந்திருக்கலாம். இன்பத்தின் நிலைக்களமாக இருப்பவை கல்வியும் கலவியுமாகிய தொழிலிரண்டேயாதலின், முற்பாட்டு அவற்றின் இயல்புணர்த்திற்று.

"ஆயுந் தொறுந்தொறும் இன்பந் தருங்கலை ஆங்கறிவுமாயுந் தொறுந்தொறும் இன்பந்தரும் வள்ளல் வார்கழல்கள்" எனத் தணிகைப் புராணமும்,

"தேருந்தொறும் இனிதாந் தமிழ்" என்று தஞ்சைவாணன் கோவையும் உணர்த்தியவாறறிக. அறிவுமாய்தல்-தற்போதங் கெடுதல்; பசுபோதக் கவளமிடல்.

(தொடரும்)

பஞ்ச சபைகள்

1.	திருவாலங்காடு	—	இரத்தினசபை
2.	சிதம்பரம்	—	கனகசபை
3.	மதுரை	—	ரஜதசபை
4.	திருநெல்வேலி	—	தாமிரசபை
5.	திருக்குற்றாலம்	—	சித்திரசபை

குடதிசை யதனில் மருவுகுற்றாலம் கோதறு சித்திர சபையாம்
குற்றமில் குணக்கின் பழையனூர் மன்றம் குலநவ ரத்னமன்றென்பார்
அடல்விடைப் பாகன் நெல்லையம் பதியில் அம்பலம் தாம்பிர சபையாம்
ஆலவாய் மதுரை வெள்ளியம் பலமாம் அணிதில்லைச் செம்பொன்
அம்பலமே.

— தில்லைக் கலம்பகம்

வேண்டத்தக்கது

இருவேறுலகம்

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்ற குறளுக்கு, 'உலகத்து ஊழிறுைய இயற்கை இரண்டு கூறு; ஆதலால் செல்வ முடையராதலும் வேறு, அறிவுடைய ராதலும் வேறு என்றவாறு' என்று உரை உள்ளது.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

என்ற குறளில் 'வையகமும் வானகமும்' என்றதற்கு, 'விண் ணுலகும் மண்ணுலகும்' என்று பொருள் கூறினர் பரிமேலழகர்.

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"

என்றவிடத்தும் 'வையத்தின் வானம் என்றதற்கு நிலவுலகத் திலும் வீட்டுலகம்' என்று பொருள் கொண்டார். இவ்வாற்ருல் வையகம், வானகம் என இரு வேறு உலகம் திருக்குறளால் குறிக்கப் பெற்றமை விளங்கும்.

திருவும் தெள்ளியராதலும்

திரு – செல்வம். திருவள்ளுவர்,

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"

என்ற குறளில், அருள், பொருள் என்ற இரண்டும் செல்வமெனப் பெற்றமையைக் கூறி, அருட்செல்வமே ஏனையதினும் சிறந்த தென்று குறித்தார். 'மண்ணுலகுக்குப் பொருட்செல்வம் வேண் டும், விண்ணுலகுக்கு அருட்செல்வம் வேண்டும்' என்பதனை,

"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்ற குறளால் பெறவைத்தார்.

தெள்ளியரென்பதற்கு, அறிவுடையவர் என்றும், ஞானமுடையவர் என்றும் பொருள் கொள்ளலாம். ஞானமுடையவர் என்னும் பொருள் பெறுதல், மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தான் உணரலாம்.

இந்த வகையான சிந்தனையோடு மேலே காட்டிய குறளுக்கு,

"இருவே றுலகத் தியற்கைத் திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்று பாடங்கொண்டு, "மண்ணுலகும் விண்ணுலகுமாகிய இரண்டுலகுக்கும் இயல்பான் அமைந்த பொருட்செல்வமும், அருட் செல்வமும் ஆகிய செல்வமுடையராதலும் வேறு; அறிவுடைய ராதலும், ஞானமுடையராதலுமாகிய தெள்ளியராதலும் வேறு" என்றும் குறள் கிடந்தவாறே பொருள் கொள்ளலாம்.

செல்வம் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாமென்று கூறுவதிலும், செல்வமுடையவர் அருளுடை யவராதலும், அறிவுடையவர் ஞானமுடையவராதலும் அரி தென்று கூறுவது பொருத்தமாகத் தோன்றுகிறது. காரணம் அருளுடையவர் அருளுடைமை காரணமாகச் செல்வம் செய்ய இயலாது. அது போலவே உலகியலறிவுடையவரும், உண்டோ இல்லையோ என்ற ஐயங்காரணமாக மெய்ஞ்ஞானமும் பெற வியலாது. எனவே பெரும்பான்மையும் பொருளுடையவர் அருளும் மெய்ஞ்ஞானமும் பெறவியலாமை உணரலாம். இவ் வாற்ருல் 'ஞானத்துக்குப் பொருள் தடை; ஞானிக்குச் செல்வம் பகை'யென்ருகிறது. இது காரணமாகவே அப்பர், மாணிக்க வாசகர் போன்றவர்கள் பொருளைப் பொருளாக மதியாதிருந் திருக்கிருர்கள்.

ஸ்ரீ குமரகுருபரர்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளும் பொருளை வெறுத்ததோடு வறுமையையே வேண்டிஞர்கள். அதனைப் படிக்கவும் நமது

நெஞ்சம் அஞ்சும். சிதம்பர மும்மணிக்கோவைச் செய்யுட் பகுதி வருமாறு :—

....தில்லைவாண
வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும், அதுவே
பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது
பிறிதொன்று கிடையா தாக வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது கிடைக்கைக்
கிடம்பிறி தில்லை யாக கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையூ ணல்லது
மற்றோ ருண்டி வாய்விட் டரற்றினும்
ஈகுந ரில்லை யாகநா ளும்
ஒழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக வித்திறம்
உடனீங் களவு முதவிக் கடவுணின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே

இந்தவரம் உடல் நீங்களவும் வேண்டுமாம்; அன்றிக் கடவுள் பெரும்பதமின்றிப் பிறிதொன்றி தாம் வேண்டினும் கொடாத வரமும் வேண்டுமாம். பொருள் வெளிப்படை. மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள். கந்தையும் மிகையென்றெண்ணிய அவரது வீரந்தான் என்னே?

கனவு

இரவிலே தூங்குகிறபோது கனவிலே கண்ட சுகதுக்கங்கள் விழிப்பு நிலையிலே மறைந்து போகின்றன. அவற்றுக்காக அறிவுடையவர்கள் யாரும் மகிழ்வதோ வருந்துவதோ இல்லை. குழந்தைகள் கனவில்கண்டதை நினைந்து கனவைக் கனவென் றுணராமல் விழிப்புநிலையிலும் அழும். அப்போது பெரியவர்கள் சமாதானம் செய்யவேண்டியிருக்கும். அது போன்றதே நமது உலகியல் சுகதுக்க அநுபவங்களும். ஸ்ரீ குருஞானசம்பந்த

சுவாமிகளும், 'உலக வாழ்வனைத்தும் பொய்யாகத் தோன்றாத போது மெய்யாகத் தோன்றிச் சுகதுக்கங்களைத் தரு'மென்பதனையும், 'பொய்யாகத் தோன்றிய போது சுகதுக்கங்கள் இல்லை'யென்பதனையும்,

'எத்தனைதான் கற்றாலும் எத்தனைதான் கேட்டாலும்
எத்தனைசா தித்தாலும் இன்புறா — சித்தமே
மெய்யாகத் தோன்றி விடும்உலக வாழ்வனைத்தும்
பொய்யாகத் தோன்றாத போது' என்றருளுவார்கள்.

(சிவபோகசாரம் செய்யுள் 111.)

'எல்லாம் கனவு போன்றது' என்பதனையும்,

'எத்திசையும் எவ்வுலகும் எத்தொழிலும் எப்பயனும்
நித்தியமென் றெண்ணில் நிலையாதே – புத்தியினால்
கண்ணாடி யில்தோன்றி மாய்ந்துவிடுங் காண்இவற்றைக்
கண்ணாடி யிற்கனவிற் காண்' என்றருளுவார்கள்.

(சிவபோகசாரம் செய்யுள் 110,)

இவ்வாற்றான் இஃதோர் பொய்ம்மாய உலகமென்பதனை உணர்ந்தால் நாம் கனவிற்கண்டதனைக் கொண்டு கலங்காததுபோல விழிப்பு உலகியல் நிலையிலும் வேதனையின்றி வாழலாம்.

ஞானிகளுக்குச் சுகமும் துக்கமும், செல்வமும் வறுமையும், நட்பும் பகையும் எல்லாம் ஒன்றே. அந்த நிலையில் அவர்களுக்கு வேண்டுதலும் வேண்டாமையும் இல்லை. நாம் வேண்டத்தக்கதறிந்து வேண்டவும், ஞானம்பெறவும், சிவஞானிகள் அருளிச் செய்த ஞான நூல்களை இடைபடாது சிந்தித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். ஞானநூல்களாக அமைந்த பலவற்றுள்ளும் திருவாசகம் சிறந்தது.

மாணிக்கவாசகம்

மாணிக்கவாசகர் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்றவர்; ஆட்பட்ட அன்றே தன் ஆவி, உடல், உடைமை எல்லாம் அவனுக்கே அர்ப்பணித்தார்; இறைவன் உடைமையானார். நன்மையும் தீமையும், வேண்டுதலும் வேண்டாமையும் அவருக்கு இல்லையாயின. அந்நிலையில் அவர் காமியப்பயன் கருதாது பாடிய பாடல்,

'வேண்டத் தக்கது அறிவோய்நீ வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசுஒன்று உண்டுஎன்னில் அதுவும் உன்தன் விருப்புஅன்றே'

என்பதாகும். இப்பாடல் எல்லோரும் நாள்தோறும் பாட வேண்டிய பாடல்; சிறப்பாகச் சிவபூஜை செய்பவர்கள் பூஜை முடிவில் பாடுகின்ற பாடல். இராவணன், சூரன் போன்றும் இந்திரன், குபேரன் போன்றும் அழியாவரமும் செல்வமுமாகிய காமியப்பயன் வேண்டினும் கிடைக்குமாயினும், சிவபூஜையின் நோக்கம் அதுவல்ல. இனியொரு பிறவி எடுத்து இளையாது இப்பிறவியிலேயே முத்திக்குத் துணையாய வினையொப்புப்பெற வேண்டுமென்பதே நோக்கம். நல்வினை இருப்பினும் அதனை அனுபவிக்க மீண்டும் பிறந்தேயாகவேண்டும். எனவேதான் பூஜையின் முடிவில் ஜெபபலன், கன்மபலன், பூஜா பலனையும் தன்னையும் சிவனது வரத அஸ்த்தத்திலே அர்ப்பணித்தல் மரபாக உள்ளது. இது சிவபூஜையில் சமர்ப்பணம் என்னும் அங்கமாகும்.

மாணிக்கவாசகர் நெஞ்சுள் இறைவன் வீற்றிருப்பதனுலும், அவன் சர்வ வியாபகனுதலாலும், அவனன்றி அணுவும் அசையாதாதலாலும் 'தான் வேண்டத்தக்கதை அறிபவன் அவன்' என்பார், 'வேண்டத் தக்கது அறிவோய் நீ' என்ருர். 'நான் சிற்றறிவுடையவன்; நீ முற்றறிவுடையவன்; எனக்கு நல்லதும் கெட்டதும் தெரியாது; எனக்குத் தக்கதறிந்து அளிப்பவனும், நான் பலவற்றை வேண்டினும் அவற்றுள் தக்கதறிந்து தருபவனும் நீ' என்ருருமாம். அன்றியும், 'நான் அடிமை; நீ ஆண்டான்; உன் அடிமைக்குத் தக்கதறியும் கடப்பாடு உன்னதே' என்று குறித்தாருமாம். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் தன்மையும் அன்பாக வேண்டியவற்றைக் குறைவிலாது நிறைவாகக்கொடுக்கும் வன்மையும் நோக்கி 'வேண்டமுழுதும் தருவோய் நீ' என்ருர்.

இத்தகைய தன்மையும் வன்மையும் உடையையாயினும், உன்னை வேண்டிப் பெருது அகந்தைகொண்டு உன் அடியும்

முடியும் காண வேண்டுமென்று முயன்ற அயனுக்கும் மாலுக்கும் காண அறியாதவனுய் என்பார், 'வேண்டும் அயன் மாற்கு அரியோய்நீ' என்ருர். ஆழ்ந்துகாணுர் உயர்ந்தெய்த கில்லார் தாழ்ந்து தந்தம் முடிசாய நின்ருர்' என்ற சம்பந்தர் வாக்கும் நினைக்கத் தகும்.

அயனுக்கும் மாலுக்கும் அரியை யாயினும் அன்புடைய இவ்வடிமையை அன்புடைமை நோக்கி நீயே என்னை ஆண்டாய் என்பார், 'வேண்டி என்னைப் பணி கொண்டாய்' என்ருர். "இந் நிலையில் விரும்பி நீ எதனை எனக்கு அருளிச் செய்தாயோ அதனை அடியேன் ஏற்பேன்; நான் விரும்புவது ஏதும் இல்லை; அஃதன்றி நான் உன்பால் விரும்பும் பரிசு ஒன்று இருக்கு மாயின் அதுவும் நீ என்னை விரும்பி ஆட்கொண்டாயே அந்த உன் விருப்பத்தையே வேண்டுவேன்'' என்பார், 'வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன் தன் விருப்பு அன்றே' என்ருர். நீ என்பால் விருப்புடையவனுக இருக்க வேண்டுமென்பதையே அடியேன் வேண்டுவேன்' என்றவாறு.

மாணிக்கவாசகர் திருவாசகம் முழுவதிலும் அவன் அருளும் அன்பும் தன்பால் வேண்டுமென்பதையே 'வேண்டும்' என்ற உடன் பாட்டாலும், 'வேண்டேன்' என்ற எதிர்மறையாலும் குறித்துள்ளார். அவனது அன்பையும் அருளையுமே தான் வேண்டியமை 'மெய்கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆக வேண்டுமே' என்றும், 'வேண்டும் நின்கழற்கண் அன்பு பொய்மை தீர்த்து மெய்மையே'; 'மெய்யன்பை உடையாய் பெறநான் வேண்டுமே'; 'சிவனே எம்பெருமான் எம்மானே உன் அருள் பெறும் நாள் என்று என்றே வருந்துவனே' எனவும் குறித்துள்ளார்.

வேண்டுவோம்

அடிமை ஆண்டானிடம் ஒன்றை விரும்பிக் கேட்டுப் பெறு வதிலும், ஆண்டான் விரும்பிக் கொடுப்பதைப் பெறுதல் சிறந்தது. அதனினும் ஆண்டான் விருப்பத்தையே தன்பால் பெற்றிருப்பது சாலச் சிறந்தது. ஆண்டான், அடிமைமாட்டு விருப்புடையனுயின், தன் அடியார் குற்றங்கள் நீக்கிக் குணங்

கொண்டு கோதாட்டுவானன்றே. நாமும் பிறிதொரு பொருளும் பொன்னும் போகமும் வேண்டாது, அவன் அருளையும் அன்பையுமே வேண்டிப் பெறுவோமாக! அதற்கு சதா அவன் திருவடி சிந்தனையோடு (சதாசிவசிந்தனை) நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் அவன் திருவடியைப் போற்றுவோமாக.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல்கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சேக்கிழார் சுவாமிகள் அருளிய

★ பெரிய புராணம் ★

(பன்னிரண்டாம் திருமுறை)

[புதிய பதிப்பு]

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 276-வது குருபூசைத் திருநாள் நினைவு வெளியீடு

952 பக்கங்கள் கொண்டது. (26 + 926)

உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பெற்றது.

★ *பிரதி ரூ.* 3-00 ★

(தபால் கட்டணம் வேறு)

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

கிடைக்குமிடங்கள் :—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம் — *(திருநெல்வேலி ஜில்லா)*

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

கீழே அமர்ந்திருப்பவர்கள்:- (இடமிருந்து வலம்)

S. இசக்கி	IX B
V. சண்முகம்	X B
T. சிவசுப்பிரமணியன்	IX E
K. ராமசாமி	IX E

அமர்ந்திருப்பவர்கள் :- (இடமிருந்து வலம்)

P. உலகராஜ்	IX E
S. தண்டபாணி	X D
P. ரெகுபதி	XI A

வித்துவான் திரு N. காசினிவேந்தப்பெருமாள்

உயர்திரு. P. சோமசுந்தரம் அவர்கள், B. A., B. T.
(தலைமை ஆசிரியர்)

வித்துவான் திரு. K. பாக்கியம்

S. பிச்சாண்டி	XI A
S. சுப்பிரமணியன்	XI A
S. வெங்கட சுப்பிரமணியன்	X E

முதல் வரிசையில் நிற்பவர்கள்:- (இடமிருந்து வலம்)

K. வேம்படி சுடலை	X D
M. சங்கர ஆனந்தம்	X C
S. சோமசுந்தரம்	IX E
A. குலசை முத்து	X D
S. வெங்கட்ராமன்	X A
A. குமரன்	X D
K. தாணுவன்	X A
M. சுப்பிரம்ணியன்	XI B
M. கந்தசாமி	X A

மேல் வரிசையில் நிற்பவர்கள்:- (இடமிருந்து வலம்)

N. கிருஷ்ணன்	X D
G. ஆவுடையப்பன்	XI C
S. M. சுப்பிரமணியன்	X B
P. பாலசுப்பிரமணியன்	XI C
N. ஆறுமுகம்	XI A
R. S. சுடலையாண்டி	XI C
S. அஞ்சுரான்	XI A
S. நெல்லையப்பன்	XI A
N. வெங்கடசுப்பிரமணியன்	XI A
V. பெருமாள்	XI B
R. S. சோமசுந்தரமூர்த்தி	XI A

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 22–2–50ல் கருணைபாலித்தருளிய அறக்கட்டளையின் பிரகாரம் வழக்கம்போல் இலவசமாய் இவ்வருடம் அன்னம்பாலிப்புப் பெற்று வரும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியின் 30 மாணவர்கள்.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 17. இதழ் 8-ன் தொடர்ச்சி

God is distant to the doubter; Near to the clear visioned

மயக்கமுடையவர்க்கு இறைவன் தூரத்திலிருக்கிறான்; மயக்கம் தெளிந்தவர்க்கு அருகாமையிலிருக்கிறான்

122. சேயன், அணியன், பிணியிலன், பேர்நந்தி
தூயன், துளக்கற நோக்க வல்லார் கட்கு;
மாயன், மயக்கிய மானுடராமவர்
காயம் விளைக்கும் கருத்தறியார்களே.

He is far away,
He is near at hand
He is rid of ailments,
He is of immortal name Nandi;
Transparent to those that hath the unwavering vision;
Elusive to those men who are tossed in doubt;
Such knoweth not the mysterious purpose for which the fleshly body is fashioned

இறைவன் எட்டாதவனாயிருக்கிறான்; அருகாமையிலுமிருக்கின்றான்; பாசபந்தமென்னும் நோயற்றவன்; நந்தி என்னும் புகழ்பெற்றவன். தெளிவுபெற்ற ஞானவான்கட்கு தெளிவாக அறியும் தூய்மையுடையவனாக இருக்கிறான்; மயக்கமுற்ற மனி

தர்க்கு மயக்குகின்ற மாயமாக இருக்கின்றான். அங்ஙனம் மயங்குதல் பெற்றோர், இந்த உடம்பின் பயன் இன்னதென்பதை என்றும் அறியாதவராகவே இருப்பர்.

To end the cycle of births is the end of Seeking
பிறப்பினை ஒழிக்கும் வழி கண்டபின் வேறுவழிவேண்டா

123. வழியிரண்டுக்கு மோர் வித்ததுவான
பழியது, பார்மிசை வாழ்தல் உறுதல்;
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்று
அழிவறிவார், நெறிநாட நில்லாரே.

To be born and to live again and again here
Verily is the curse of all; [below,
It is the seed of Karma twain;
An thou but listen to Him that Knoweth
The origin of the swirl that is birth and death,
No more seeking do thou need.

நல்வினை, தீவினை ஆகிய இரு வினைக்கும் வித்தாயிருப்பது, உலகிலே மீண்டும் மீண்டும் பிறந்து வாழ்தலாம் பழியாகும். அந்தப்பிறவிச் சுழலின் உண்மை அறிவோனாகிய (குருவின்) உபதேசப்படியே நின்று, தானென்ற உணர்வு கெடுவோர், பின்னே நெறியேதும் நாடுதல் வேண்டார்.

குறிப்பு:

வரி 1.2 *வழியிரண்டு - நல்வினை, தீவினை - பிறத்தலும் வாழ்தலுமே இவற்றிற்கு வித்தென்றார். இறத்தல் என்னாது வாழ்தல் என்றது, வினை ஈட்டம் வாழ்தலிலே நிகழ்தல் என்பது பற்றி.*

வரி 4 *அழிவு அறிவார் - ஆணவம் அழியப்பெறுவார். ஆணவமே பிறப்பிறப்புச் சுழிக்கு மூலகாரணமாதலால்.*

The Lord and Nandi are one
நந்தியும் இறைவனும் வேறாகார்

124. மாதவர் எல்லாம் மாதேவன் பிரான்என்பர்
நாதமதாக அறியப்படு நந்தி
பேதம் செய்யாதே பிரான் என்று கைதொழில்
ஆதியும் அந்நெறியாகி நின்றானே.

All the holy ones haileth Him as the Great God,
the Supreme Lord,
He that is Nada and beareth the name Nandi;
Thou too shalt make no distinction,
But in prayer lift thine hands to Him as Being
Supreme;
And the Primal One shalt as such reveal Himself.

பெருந்தவத்தினரெல்லாம் அவனைத் தேவர்களுக்குப் பெரியோனே, தலைவனே என்று போற்றுகின்றனர்: அவனே நாத நிலையில் நந்தி என்றும் பேசப்படுகிறான்; ஒன்றிய மன உறுதியோடு அவனைத் தலைவனே என்று கைகூப்பி வணங்குவாயேல், யாவற்றிற்கும் முதலாயுள்ள இறைவன் அவ்வாறே உறுதியாகத் தோன்றுவான்.

வரி 2 *நாதம் - நாதப்பிரமம்.*
4 *அந்நெறி - பேதம் செய்யாத நிலையாக.*

God is within thee; and yet far away

இறைவன் உள்ளத்துள்ளே இருக்கின்றான்; ஆயினும் பெருந் தூரத்திலுமிருக்கின்றான்

125. அரனெறி அப்பனை, ஆதிப்பிரானை
உர நெறியாகி உளம் புகுந்தானைப்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறியாவிடில் பல் வகைத்தூரமே.

He is Hara, the Holy Father, the Primal Lord
As implacable Truth He entered the heart;
But if the hearts of Bhaktas sought after
They knoweth Him not; [alienpaths
Then is He far far away.

அவன் அரன் எனப்படுவான்; ஞானத்தந்தையுமாவான்; தனி முதல்வனும் தலைவனுமாவான். அவன் மெய்ம்மை வடிவாக என் உள்ளத்தே உறுதியாகப் புகுந்தான், ஆயினும் பிறநெறிகளிற் சென்ற பத்தர்கள் அவனைச் சித்தத்தே பெறாத விடத்து, அவர்களுக்கு அவன் அப்பாற் பட்டவனாகவே இருப்பான்.

(தொடரும்)

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 17. இதழ் 8-ன் தொடர்ச்சி)

கட்டுண்ட படர்சடைக் காட்டெம்பி ரான்வைத்த
 கலைமதியொ டையநீயக்
கவுரிதிரு முடியில்நித் திலமிட் டிழைத்திட்ட
 கதிரிளம் பிறையிணைப்பத்
தெட்டுண்ட போல்முழுத் திங்களென் றேக்கறும்
 செழுமணிச் சூட்டுமோட்டுச்
செம்பாம்பு பைவிரித் தாடுதலும் ஓடிநின்
 சிறுநறுங் குஞ்சிக்கிடும்
மட்டுண்ட பைங்குலைக் காந்தளென் றணையவம்
 மாசுணம் வெருண்டோடலும்
மணிமுடியின் நகுதலையை மற்றெமை நகைத்தியால்
 மலரவன் தலைநீமுனம்
குட்டுண்ட தறியாய்கொல் எனவிதழ் அதுக்கும்
 குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
 குமரகுரு பரன் வருகவே. 55

எமது தலைவனே! நீ, கட்டப்பட்ட விரிந்த சடைக்காட்டிலே எமது சிவபெருமான் வைத்துள்ள பிறைத் திங்களுடன் அந்தக் கவுரியம்மையின் திருமுடியில் முத்துப் பதித்திழைக்கப்பட்ட ஒளியையுடைய இளம்பிறையாகிய ஆபரணத்தைச் சேர்க்க ஏமாற்றப்பட்டதுபோல் அதனை முழுத் திங்களென்று நினைத்து அது பெருததால் வருத்தத்தை யடைந்த செழுமையாகிய மணி யொளி வீசுகின்ற உச்சியையுடைய செம்மையாகிய பாம்பு படம் விரித்து ஆடுதலைச் செய்ய அப்பாம்பைத் தமது சிறிய நறிய திருமுடியில் புனைவதற்குரிய தேன் நிறைந்த பசிய

தொகுதியாகிய காந்தளென்று அதனருகே நீ செல்ல அப்பாம்பு அஞ்சியோடுதலும், அவ்வேளையில் சிவபெருமான் அணிந்திருக்கிற மணிமுடியையுடைய பிரமதேவனது சிரிக்கும் தலையைப் பார்த்து, "ஏ, மலரவனது தலையே! நீ எம்மைப் பார்த்துச் சிரிக்கின்றாய். முன்னம் எம்மாற் குட்டுண்டதை அறியாயோ" என உதட்டை அதுக்குகின்ற குமாரநாயகனே! வந்தருளுவாயாக. குரவம் மணக்கின்ற கந்தபுரியில் அருள் குடிகொண்டு வீற்றிருக்கின்ற குமரகுருபரனே! வந்தருளுவாயாக.

அங்கைத் தலத்தம்மை செங்கண் புதைத்தற்
 கடங்காமை யாலெம்பிரான்
அலர்விழிகள் பொத்தலு மிருட்படல முடவுள்
 ளஞ்சிநின் றேங்கவேங்கிச்
செங்கைத் தலங்கொண் டெடுத்தணைப் பாட்கும்
 திருத்தாதை யார்க்குமுத்தம்
திருமுகமொ ராறுங் கொடுப்பக் கதுப்பிற்
 றெறித்துமுத் தந்தருகெனும்
கங்கைக்கு நல்கா தெழுந்தலறி யோடலும்
 கண்ணீர் துடைத்தெடுத்துக்
கான்மலரு நீவித்தன் மார்புற வணைக்குமக்
 கவுமாரி யருண்மாரியிற்
கொங்கைக் குடங்கொட்டு பாலருவி யாடும்
 குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
 குமரகுரு பரன் வருகவே. 56

அழகிய கைத்தலங்களால் உமையம்மையாரது சிவந்த திருக்கண்களைப் பொத்துவதற்கு அடங்காமையால் எமது சிவபெருமானது ஒளிமிக்க விழிகளைப் பொத்துதலும் உலகம் முழுவதிலும் அதனால் இருட் படலம் மூடிக்கொள்ள அது கண்டு உள்ளம் அஞ்சிநின்று நீ ஏங்கி நிற்ப உன்னைப் பார்த்து ஏக்கமடைந்து தனது சிவந்த கைகளால் எடுத்தணைத்த உமாதேவியாருக்கும், தந்தையாராகிய சிவபெருமானுக்கும் ஆறு திருமுகங்களாலும் நீ முத்தம் கொடுக்க அதனைக்கண்டு உனது கன்னத்தில் தெறித்து 'எனக்கும் முத்தம் தருவாயாக' என்று வேண்டிய கங்காதேவிக்குக் கொடாது எழுந்து நீ அலறி ஓட உன்னை அணைத்தெடுத்துக் கண்ணீரைத் துடைத்துத் திருப்பாத

மலர்களை வருடித் தனது மார்பு பொருந்த அணைத்த கௌமாரி யினது அருள் வெள்ளத்திலும் அவளது கொங்கைக் குடங்கள் கொட்டுகின்ற பாலருவியிலும் துளைந்தாடுகின்ற குமார நாய கனே ! வந்தருளுவாயாக ! குரவம் மணக்கின்ற கந்தபுரியில் அருள் குடிகொண்டு வீற்றிருக்கின்ற குமரகுருபரனே ! வந் தருளுவாயாக !

பைந்தண் கமல வட்டவணைப்
பாவை யனையார் பூவிரியும்
பசுமென் குழற்கூட் டகிற்புகையின்
படல மூட முடைநறவின்
கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்
கடைசி மகளிர் செந்நெலைப்பைங்
கன்ன லெனவுங் கன்னலைப்பூங்
கமுக மெனவுங் கடைக்கூடாத்
தந்தங் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறும்
சமயத் தவர்போற் றலைமயங்கும்
அந்தண் பழனக் கந்தபுரிக்
கரசே வருக வருகவே
அருளா னந்தக் கடற்பிறந்த
அமுதே வருக வருகவே 57

பசிய குளிர்ந்த தாமரை மலராகிய வட்ட மெத்தையில் எழுந்தருளியிருக்கின்ற திருமகளை யொத்த மங்கையர் பூவிரிந்த பசிய மெல்லிய கூந்தலுக்கு ஊட்டுகின்ற அகிற் புகையினது படலம் எங்கும் பரந்து மூட அதனால் ஊனும், கள்ளும் ஆகிய இவற்றின் நாற்றம் மிக்க செவ்விய துவர் வாயையுடைய கடைசியர் குலப் பெண்கள் செந் நெற்பயிரைப் பசிய கரும்பு என்றும், கரும்பை அழகிய கமுகு என்றும் முடிவடையாத தங்கள் தங்கள் கருத்துக்குப் பொருந்தியபடி சொல்லிச் சொல்லிப் பெரிய மயக்கக் கடலில் மூழ்கித் தடுமாறுகின்ற சமய வாதிகளைப் போலத் தலை தடுமாறுகின்ற அழகிய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கந்தபுரிக்கு வேந்தனே ! வந்தருளுவாயாக ! வந்தருளுவாயாக ! அருளானந்தச் சிவக் கடலிற் பிறந்த அமுதமே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக! (தொடரும்)

என்று நீ அருள்வாய்?

திரு. ஆ. துரை அவர்கள்,
வித்துவான் நிறைநிலை,
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச் சிவபுரி.

தூயநல் உள்ளந் தோறும்
துலங்கிடும் ஞானக் குன்றே!
ஈயவோ ஏது மில்லா
எளியவன் இறைஞ்சு கின்றேன்!
தீயவாம் எண்ணங் கோடி
தினவெடுத் தென்றன் நெஞ்சை
சாயவும் வைப்ப தென்னே
சற்றருள் செய்தி டாயோ?

விழிகளில் அனலைக் கொண்ட
விரிசடை ஈசா! என்றன்
விழிகளில் ஆசை வைத்தே
ஆட்டுவித் தென்னைக் கொல்லும்
தொழிலது சரிதா னுமோ?
தொல்லையை எமக்கேன் ஈந்தாய்?
பிழிந்திட வேண்டா! நாயேன்
பிறப்பறுத் திட்டால் போதும்!!

வாழ்நாள் முழுது மிந்த
வெளியிடை உன்னைப் போற்றும்
பாழுடல் கொண்ட பேயன்!
பாவியேன் என்ற னுக்கோ
ஏழ்கடல் கடக்கு மாற்றல்
என்றுநீ அருள்வாய்? முன்னை,
ஊழ்வினை என்னைக் கொல்லா
ஒருபுணை அளித்தி டாயோ?

முவெட்டாம் அகவை போதும்!
முண்ட "தீ" நெஞ்சிற் போதும்!
பூவிட்டுப் பாடிப் போற்றிப்
பொழுதெலாம் இனிமை யாக்கிக்
கூவிய குயில்தான் நானுன்
கருணையாம் சோலை யுள்ளே
தாவியே வந்து லாவத்
தண்ணருள் செய்தி டாயோ?

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருத்தோணோக்கம்

இனி, திருத்தோணோக்கமாவன:— முற்பதிக ஞான வெற்றி பாடின அநுபவ நிட்டாபரராள் இவ்வகையான சிவானந்தப் பேறு பெறத் தேகப்பேறு கிடைத்ததே என்று மகிழ்ந்து, தேகத்தை நோக்கிக் கொண்டாடி, எளிதாய்ப் பசுகரணமெல்லாஞ் சிவகரணமாக்கி, வேறறத்தோன்றி, பேரின்பமே தானாய் நின்ற முறைமை யெல்லாம் பெருங்கருணையினாலேயே என்று கண்டு அதனைச் சொல்லுகின்றதெனக் காண்க.

இத்திருப்பாக் கலி விருத்தம்.

திருத் தில்லையிலோதினது.

இனி, திருவம்பலத்திலே நிருத்தஞ் செய்த குஞ்சித பாதத்திற்கூட வேண்டுமெனக் கூறும் (தி. – ன.);—

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி கூடும்வண்ணம் தோணோக்கம்.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! கானலைத் தாமரைப் பொய்கையென நாடி, அலையும் அறிவிலாதவனைப் போல, இத்தேகாதிப் பிரபஞ்சம் மெய்யெனக்கருதி அலைவுறாது, தேசமுதலாகிய தீர்த்தம் விளங்குந் தில்லை மன்றுள்திரு நடனஞ்செய், நடராசா! உனது குஞ்சிதபாதத்தில் அன்பு அபேத வத்துவிதமாக வைப்பதே பரமுத்தியெனத் திருத்தோள் கொட்டியாடுவோம்! வாருங்கள்! ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

புராண படனம்

[மலர் 17, இதழ் 8-ன் தொடர்ச்சி]

கலைஞன் பிரமன்

என்னை ஒருவர் கேட்டார்; "திருமூர்த்திகளில் ஒருவராகிய பிரமா, கலைமகளைத் தாமே படைத்திருக்க தந்தை முறையிலே இருக்க, அந்தக் கலைமகளைக் கல்யாணம் செய்து கொண்டார் என்று புராணம் சொல்கிறதே! பெற்ற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்பவர் கடவுளா? அதுவும் ஒரு சமயமா? அதிலும் முதல் தொழிலாகிய படைப்புத் தொழில் செய்யும் கடவுளே அதுமாதிரிச் செய்யலாமா?" என்றும் கேட்டார். நான் பேசாமல் இருந்தேன். பிறகு ஏதோ கதை அளந்தேன்.

ஒரு சபையில் பாடிக்கொண்டிருந்தார் ஒரு பாடகர். நேரம் ஆகிவிட்டது. வேற்றூருக்குப் போகவேண்டியிருந்தமையால் கச்சேரி முடிந்த உடனேயே யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வேகமாகப் புறப்பட்டு விட்டார். தம்முடைய பாட்டு எப்படியிருந்தது என்று பிறரைக் கேட்காமலேயே வேகமாகப் போன அந்தப் பாடகரை ஒருவர் பார்த்து, "இன்று பாடினீர்களே, நன்றாய் இருந்ததா என்று யாரையும் கேட்காமல் போகிறீர்களே; யாரையாவது கேட்க வேண்டாமா?" என்று கேட்டார். "யார் சொல்லவேண்டும்? நான் சுவைத்துப் பாடினேன்; நானே அனுபவித்துப் பாடினேன். அதனால் நிச்சயமாக அது எல்லோருக்கும் இன்பமாகத்தான் இருந்திருக்கவேண்டும்" என்று அவர் விடை சொன்னார்.

கலைஞன் தான் படைத்த படைப்பிலே முதற்கண் இன்பம் அடைகிறான். சிற்பாசாரியார் ஒருவர் ஒரு விக்கிரகம் செய்கிறார். அவர் படைப்பைக் கோயிலில் வைத்து எல்லோருமே வழிபடுகின்றார்கள். தாம் படைத்த படைப்புத்தானே; தம்

'சிவதொண்டன்' ஆசிரியர் அனுமதி பெற்று இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

காலடியில் கிடந்த கல்தானே என்று அந்தச் சிற்பாசாரியார் நினைப்பதில்லை. தாமும் மற்றவர்களைப் போல் இரண்டணாவைக் குருக்களிடம் கொடுத்து, அருச்சனை தீபாராதனை செய்து அநுபவிக்கிறார். தாம் படைத்த படைப்பினால் அச் சிற்பாசாரியார் இன்பம் அடைகிறார்.

பிரம்மாவைவிடப் பெரும் கலைஞன் உண்டா? கலைஞனுக்கும் தொழிலாளிக்கும் வித்தியாசம் உண்டு. தொழிலாளி ஒரே மாதிரியான பொருளைச் செய்து கொண்டே இருப்பான். கலைஞன் வெவ்வேறு விதமான சிருஷ்டிகளைப் படைத்து அதிலே இன்புறுவான். மாபெரும் கலைஞனாகிய பிரம்மாவும் மக்களைப் படைக்கின்ற போது அவயவங்களெல்லாம் அந்தந்த இடத்திலே காணப்பட்டாலும் மாறுபட்ட முகங்களையுடைய மக்களைச் சிருஷ்டி செய்து தான் இன்பம் காண்கிறான். கலைஞன் தன் படைப்பிலே முதற்கண் இன்பம் கண்டான் என்பது கலையுலக உண்மை. அதையே புராணமும் கதையாகச் சொல்கிறது. இது தவறா? இது இயல்புக்கு மாறுபட்ட செய்கையா?

பொய் என்பது தவறு

இவ்வாறு புராண தத்துவங்களையெல்லாம் கலை நோக்கோடு பார்க்கின்ற போது உண்மை புலப்படும். உண்மை ஒருவருக்குப் புலனாகாமல் இருக்கலாம். அதனால் பொய்யென்று சொல்லக் கூடாது. ராமக்கிருஷ்ண பரமகம்சர், "கடவுள் உனக்குத் தோன்றாமையால் கடவுளே இல்லை என்று சொல்லாதே" என்று சொல்கிறார். பகல் நேரத்தில் வானத்தில் நட்சத்திரம் தோன்றவில்லை என்பதனால் பகலிலே நட்சத்திரங்களே இல்லை என்று நாம் சொல்லலாமா? சொல்லக்கூடாது. புராணத்தில் உள்ள தத்துவம் எனக்கு விளங்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் அதில் தத்துவமே இல்லை என்று சொல்ல லாமா? ஒருவர் சொல்லும் விளக்கம் விளங்காமல் இருக்கலாம். மற்றவர்கள் வேறு விளக்கம் கொடுக்கலாம். அதனால் புராணங்களிலே தத்துவமே இல்லைஎன்று சொல்லாதீர்கள். இல்லவே இல்லை என்பதற்கும் எனக்குப் புலனாகவில்லை என்பதற்கும் வேறுபாடு உண்டு. அதுபோல் புராணத்திலே தத்துவம் இல்லை என்று

சொல்வது தவறு. புராணத்தின் தத்துவம் எனக்குத் தெரிய வில்லை என்று சொல்வது பொருத்தம்.

புராணச் செய்திகள்

திருமூலர் புராணங்களைப் பற்றிப் பல இடங்களில் சொல் லியிருக்கிறார். புராணக் கதைகள் இன்று நேற்று நடந்தவை என்று கொள்ளக்கூடாது. திருஞானசம்பந்தர் திருவாய்மலர்ந் தருளிய தேவாரத்திலும், அதற்கு முன்பு இருந்த காரைக்கால் அம்மையார் பாடிய திருப்பதிகங்களிலும் வேறு பழைய நூல் களிலும் சிவபெருமான் செய்த திருவிளையாடல்களைப் பற்றிய குறிப்புகள் பல உண்டு.' அத்தனை குறிப்புகளையும் காட்டும் புராணம் இல்லை. அவர்கள் காலத்தில் புராணக்கதைகள், வர லாறுகள் வழங்கி வந்தமையால் அவற்றை ஆங்காங்கே இடை யிலே சொல்கிறார்கள். வழக்காறு இந்த நாட்டிலே இருக்க வேண்டுமானால், எவ்வளவோ காலமாக இந்த நாட்டில் புராண வரலாறுகளைப் பற்றிய அறிவு இருந்திருக்கவேண்டும். சங்க காலத்துப் புராணமாக ஒன்று இல்லையேயொழிய, புராணத் திலே காணப்படும் பல செய்திகள் கிடைக்கின்றன. சிவபெரு மான். முருகன், திருமால் முதலியவர்களைப் பற்றிய பற்பல வர லாறுகள் பழைய நுல்களில் வருகின்றன. எம் பெருமான் திரு மேனியில் ஒரு பாதி பெண் என்ற செய்தி பெருந்தேவனார் பாடிய கடவுள் வாழ்த்திலே காணக்கிடக்கிறது. நெற்றியிலே கண்ணு டையவன் இறைவன் என்னும் செய்தியும் பல இடங்களில் காணக்கிடக்கிறது. சிவபெருமான் தனக்குள்ளேயே பராசத் தியை அடக்கிக் கொண்டிருப்பான்; வெளிப்படுத்தவும் செய் வான் என்பதைப் புறநானூறு சொல்கிறது. இப்படித் துண்டு துண்டாகக் கிடைக்கின்றவற்றை, நமக்கு இப்போது கிடைக் கும் புராணங்களிலும் வரலாறுகளிலும் காணலாம்.

புராணங்களுக்கு எப்படிப் பொருள் செய்ய வேண்டும் என் பதைத் திருமூலர் குறிப்பிடுகிறார். அது நிகழ்ந்ததா இல்லையா என்று ஆராய்வது அவர் நோக்கம் அல்ல. இன்று நமக்கு அதனாலே என்ன பயன்? அது தான் நம்முடைய நோக்கம். அந்த வறலாற்றினூடே உள்ள கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்,

முப்புரம் எரித்த கதை

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே',

என்பது ஒரு திருமந்திரப் பாட்டு. "அப்பணி........மூடர்கள்" என்று சொல் அளவிலே மக்கள் சொல்கிறார்கள். சொல்லியவர்கள் எல்லாம் மூடர்கள் அல்ல. சொல்லிய அளவில் நிறுத்தி விடுகின்றார்களே அவர்களையே மூடர்கள் என்கிறார். அவர்கள் அதற்கு மேல் சிந்திப்பது இல்லை. 'கங்கையை அணிந்த பரம சிவனாகிய ஆதிபுராதனன் மூன்று புரங்களை எரித்தான்' என்று சொன்ன அளவிலே நிறுத்தி விடுகிறவர்கள் அறிவு இல்லாதவர்கள். அந்தச் சொல்லுக்கு உள்ளே பொருளைத் தெரிந்து அதனூடே உள்ள உண்மையை உணர்ந்து அதனால் நலம் பெற வேண்டும். அது தான் புராணத்தினுடைய பயன்.

பின்னாலே, "முப்புரமாவது மும்மல காரியம், அப்புரம் எய்தமை யாரறிவாரே': என்று பேசுகின்றார். திரிபுரத்தைச் சிவபெருமான் எரித்தது ஒரு புராணக்கதை. மதில்களையுடைய பெரிய மூன்று நகரங்கள் இருந்தன; அந்த நகரங்களுக்கு மூன்று அரக்கர்கள் தலைவர்கள்; அந்த மூவர்களாலே உலகத்திற்கெல்லாம் துன்பங்கள் வந்து கொண்டிருந்தன; இறைவன் பார்த்தான்; சிரித்து எரித்தான் என்று சொல்லுவார்கள். எப்படியிருந்தாலும், இறைவன் முப்புரங்களை எரித்து விட்டான். இதை எப்படிப் பார்க்க வேண்டும், என்பதை திருமூலர் சொல்கிறார். 'முப்புர மாவது மும்மல காரியம், அப்புரம் எய்தமை யார் அறிவாரே". மூன்று மலங்களோடு சம்பந்தப்பட்ட முறையினால் ஆருயிர் இந்த மூன்று மலங்களின் தொடர்பினால் தானும் துன்புற்றுப் பிறரையும் துன்பத்துக்கு ஆளாக்குகிறது. அம்மூன்று மலங்களையும் அழித்தான் ஆண்டவன்.

முப்புரத்தைத்தானே அழித்தான்; தலைவர்களை அழிக்கவில்லை. அந்தப்புரங்கள் அழிந்த பிறகு இறைவனுக்குத் திருத்தொண்டு ஆற்றப் புகுந்து விட்டார்கள் அசுரர்கள். முப்புரங்களோடு எங்கும் திரிந்து வாழ்ந்த போது அசுரர்களாக இருந்த

வர்கள், முப்புரங்கள் போனபிறகு தொண்டர்களாகி விட்டார்கள். இறைவனுக்கு அருகில் இருந்து வாழும் பேறு பெற்ருர்கள். மும்மலத்தோடு சேர்ந்து ஆன்மாக்கள் ஒரு கணமும் ஒய்வில்லாமல் நிற்கின்ற இடம் ஒன்று இல்லாமல், நிலையாமல் திரிந்து கொண்டே இருக்கின்றன. அதனுலே பிறருக்கும் துன்பம்; தனக்கும் துன்பம். இறைவன் திருவருளால் மூன்று மலங்களும் அழிந்து போகும். உயிரானது மலம் நீங்கினவுடனே எம்பெருமாளுேடு இணைந்து இன்பமடையும். இக்கருத்தைத் திரிபுரசங்காரக் கதை சொல்கிறது.

ஆண்டவன் முப்புரம் எரித்த வரலாறு உண்மை. வரலாறு பழையது. நமக்கு அதனுல் பயன் இல்லை. அதன் கருத்தே பயன் தருவதாம். அந்த முப்புரத்தை எரித்ததுபோல் மும்மல புரத்தை ஞான அக்கினியால் ஆண்டவன் எரிப்பான். இந்தத் தத்துவத்தைத் தெரிந்து கொள்ளாமல், சிவபெருமான் முப்புரத்தை எரித்தான் என்று வாயாலே மட்டும் சொல்லிக்கொண்டு போகிறவர்கள் மூடர்கள். அறிவு உடையவர்கள் தத்துவத்தை உணர்வார்கள்.

நாம் முப்புரங்களோடு திரியும் அசுரர்களாக இப்போது இருந்தாலும், இறைவனுடைய ஞானக் கண்ணின் பார்வை பட்டு மூன்று புரங்களும் அழிய அவனுக்குரிய தொண்டராக வேண்டும் என்ற ஆர்வத்தை இந்த வரலாற்றிலிருந்து பெற வேண்டும். மும்மலக்கட்டு அறுந்தால் உயிரானது இறைவனுேடு ஒன்றி இன்புறும் என்ற கருத்தாகிய விதை முப்புர சங்காரக் கதையாக விரிந்தது. கதையைக்கண்டு விதையையும் உணர்ந்தால் புராணங்களால் நாம் பெறும் பயன் பெறலாம் என்ற அளவில் நிறுத்திக்கொள்கிறேன்.

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டாம்
பரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே. — திருமூலர்

முற்றும்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Tiruttondattogai.

திருத்தொண்டத்தொகை: பண்: கொல்லிக்கௌவாணம்

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும்அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனும் செருத்துணைதன் அடியார்க்கும்அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாடஆடில்
பொன்னடிக் கேமனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

I am the devotee of the servants of Kadavar Kon Kazhar Chingam, who rules over the world, and Idangazhi Nayanar and St. Cherutthunai, the king of Tanjavur. Pugazhtthunai Nayanar meditated on the Holy Feet of Nataraja at Chidambaram and I serve him. And the slave of the warrior, Kotpuli, am I, the servant of the Lord at Arur.

(To be continued)

பிழைத்தோமில்லை

வித்துவான். திரு. முத்து. வே. கணபதி அவர்கள்,
முதன்மைத் தமிழாசிரியர்.
ஸ்ரீ இராம கிருஷ்ண உயர்நிலைப்பள்ளி, கோனூர்.

மக்கள் தாம் வாழும் வாழ்க்கையைச் செம்மையுற நடத்த வேண்டி அதனைப் பல கூறுபடுத்திப் பகுத்துள்ளனர். அவ்வாறிருந்தாலும் அவர்களின் இன்றியமையாத இறுதியாயதைக் குறிக்கோளாகக் கொள்ளாக் குறைபாட்டினால் தன்னலப் பெருக்க மிக்கு நாட்டில் பஞ்சம் பசி பட்டினி என்பன வந்து புகுத நேரிட்டன. ஆகையினால் மனிதனாகப் பிறந்தான் ஒவ்வொருவனும் உணர்ந்து ஒழுகற்பாலனவாயவற்றைச் சிந்தித்தலே சிறப்புடை நோக்கமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

உழைப்பும் பிழைப்பும்

மனிதன் தான் பிழைக்கும் வழியை எண்ணி வகுத்த நெறிகளில் இன்று சிறப்புடையனவாக விளங்குவன :- 1. ஒருவனை ஒருவன் ஏய்த்துப் பிழைத்தல். 2. நட்பு முறையில் பயிலுவதாக நடித்துப் பி ழை த் த ல். 3. ஊதியத்துக்கேற்ற உழைப்பைச் சரிவர செய்யாது பொறுப்பற்ற முறையில் மனசாட்சிக்கும் விரோதமான முறையில் பிழைத்தல். 4. அதிகார இனத்தினாலும் அநியாய வழிகளாலும் பொருளை ஈட்டிப் பிழைத்தல் போன்ற பல நெறிகள் நாட்டில் நிலவி வரலாயிற்று. இதனால் இன்றைய இளைஞர்கள் இடத்திலும இது போன்ற பழக்கங்கள் இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இது தமிழர்கள் தம் நெறிக்கும் பண்பாட்டுக்கும் விரோதமானதோடு அங்கே இழுக்கையும் உண்டாக்கி விடுகிறது. ஆகையினால் இவர்கள் அனைவரும் திருந்தி உழைப்பினால் வரும் ஊதியத்தைக் கொண்டே தம் பிழைப்பை நடத்துவதாக உறுதி எடுத்துக கொண்டு உணர்ந்து

நடப்பார்களானால்தான் பிழைத்தவர்களெனக் கூற இயலும். இன்றேல் அவர்கள் இருந்தும் இறந்தவர்கள் நிலையை உறுவ தோடு நாட்டிற்குத் தீங்கு இழைத்தவர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவராவர். ஆதலால் நாம் பிழைத்தோம் என்று கூறக்கூடிய நெறியில் உண்மை உழைப்பினால் வரும் ஊதியத்தைக் கொண்டே உலகில் வாழ எத்தனிக்க வேண்டும். அந்நெறியில் முதல்வராகத் திகழ்வோர் உழவர். இவர்களையும் இத்தொழிலையும் பற்றி 2000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த வள்ளுவ நாயனார் தாம் வகுத்த குறளில்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று கூறி உழவின் பெருமையையும், அத்தொழிலாளர்களின் உழைப்பின் பெருமையையும் கூறி அவர்களைத்தான் வாழ்ந்தவ ரென்றும் ஏனையோரைத் தொழுதுண்டு பின் செல்பவர் என்றும் கூறியுள்ளார். எனவே எவர் எந்நெறியிற் சென்றாலும் அங்கு உண்மையினாலும் உழைப்பினாலும் வரும் ஊதியத்தைக் கொண்டே பிழைக்கும் வழியை வகுத்துக்கொள்ள முற்பட வேண்டும். இது உலகியல் துறையிலே இருக்கவேண்டிய நடை முறைப் பயிற்சியாகும். ஆகவே இவ்வாறு வாழ்ந்தவர்களை மட்டில் பிழைத்தவர்கள் என்று கருத-கூறமுடியுமா? முடியாது. ஏனெனில் உழவின் பயன் உழுது விதைத்துக் களையெடுத்து நீர்பாய்ச்சித் தக்க பருவத்தே அறுவடை செய்து ஆனந்தத் தோடு உண்டு களித்து இருந்தால் அஞ்ஞானத்துறையிலேயே நின்று விடுவோம். அங்கு நிற்காது மேலும் மெஞ்ஞானத் துறையில் நாட்டங்கொண்டு அங்கும் ஞானப்பயிரை அறுத்துச் சிவபோகந் துய்த்தலாகிய சிறந்த உழவினையும் செய்யவேண்டு மென்பதைத் திருநாவுக்கரசுப் பெருமான்,

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையைப் வாங்கி பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டுத் தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே"

தனித்திரு நேரிசை. 2.

என்ற பாடலால் நாம் உண்மையாகிய உழவினைச் செய்து அன்பெனும் வித்தை ஊன்றி அங்கே காணும் உலகியல் நெறிகளும் பொருள்களுமாகிய களைகளைப் போக்கிப் பொறுமையாகிய நீரை விட்டு ஆன்மாவை அறியும் நிலைக்கு இடையூருய் பொறிபுலன் அணுகவொட்டாது தக்க வேலியை இட்டு ஆன்ம தரிசனம் கண்டு சிவத்தோடு ஒன்றி நின்று சிவபோகந் துய்த்தவர்களே சிவகதியைப் பெற்ருேராவர். ஏனையோர் நெறிகளெல்லாம் அவகதிகளே யாகும். ஆகவே உயிர் எடுத்ததன் நோக்கம் எதனை உறவேண்டுமென்றறிந்து அதனை உற்ற ஒருவரைத் தான் பிழைத்தவர்கள் என்று கூறலாம். அவர்களல்லாத எம்மனோர் அனைவரும் பிழைத்தோம் என்று கூறுதல் பொருத்தமும் உண்மையும் ஆகாது. ஆதலால் நாம் பிழைத்தோம் இல்லை என்பதை உணர்ந்து பிழைக்கும் நெறியைப் பின்பற்ற வேண்டும்.

பிழைத்தோமில்லை

மனம் ஒன்றனை எண்ணி சிந்தித்துச் செயலாற்றும் நெறியில் ஈடுபட்டு இப்பிறவியை இன்னலுக்குள்ளாக்குவதோர் பெரு நிலையம். இந்நிலையம் இடத்தாலும் சூழ்நிலையாலும் தூய்மையுறும். அவ்வாறின்றேல் அங்கே ஆணவாதி மும்மலச் சேட்டையால் எண்ணத் தொலையா நோயடையச் செய்து இருட் கடலில் ஆழ்த்திவிடும். அந்நோய்களினுல் உயிர்க்கு இறுதியும், இறுதிநேரிடுவது போன்று இருந்து தப்பிக்கொண்டவர் தம்மைப் பிழைத்தோர் என்று கூறிக்கொள்வதை எண்ண நமக்கு நகைப்பு உண்டாகிறது. அவர்கள் உண்மையில் பிழைத்தவர்களல்ல என்பதைக் கூர்ந்து நோக்கின் உண்மை புலப்படும். படுவதனுல் மனம் சிறிது செம்மையைச் சிந்திக்கச் சிவனருள் தூண்ட அவனருள் வழி வரும் குருவருள் பெற்றுத் திகழும் ஒருவன் உண்மை நெறியில் சிந்தனையைச் செயலாற்ற முற்படுவானுனல் அவ்வருமை நிலையமாம் மனத்தாமரையில் மாதொரு பாகன் மகிழ்விஞேடு வீற்றிருப்பன். இவ்வளவு சிறந்த பொருள் உறையும் இடத்தை உடைய நாம் அங்கே அறிவிழந்து

“வஞ்சித்தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தே மென்று மகிழன்மின் — வஞ்சித்த

எங்குமுள ளொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு"

உழைக்காத காரணத்தினுல் உலுத்தத்தன்மை பெற்று உய்யும் நெறியையிழந்து உலவி இறந்து போகின்ருேம். இறப்பதற் கல்ல இப்பிறவியெடுத்தது என்பதனை உணர்ந்து உணர்த்திய பெரியவர்கள் உடலோடுயிர் பொருள் அனைத்தையும் உரிய வனுக்களித்து உலகைத் துறந்தனர். அது பெரிதும் சீரியது மாகிய நெறி. அந்நெறியை எம்மனோர் பற்றும் தகுதியும் திறமும் உண்டோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. என்ருலும் இல்லறநெறியில் உள்ளாரும் பிழைக்க முடியும் என்று வாழ்ந்து வழி வகுத்தவர்களின் வாக்குகள் நமக்கு உறுதி தருகின்றன.

உடலியற் கூறுகளை இருதிறத்தார் இருவகையாக்குவர். அவர்களில் மெய்ஞ்ஞானியர் அவைகளைத் தத்துவம் என்ற பெயரிட்டு அழைப்பர். விஞ்ஞானியர் வேறு வகையாகக் கூறுவர். இவர்கள் இருவரும் உடலின் உறுப்புக்களை உற்று நோக்கி அவைகட்கேற்பப் பெயர் வகுத்துத் தந்தனர். உட லிருக்கும்வரை நலமுற இருக்க உதவுவது விஞ்ஞானம். அவ் வாறு இருக்கும்போது உயிரும் நலமுற்று உறுதியை யடையச் செய்வது மெய்ஞ்ஞானம். முன்னதின் பின்னது மிகச் சிறந்த தென்பது கூருமலே விளங்குமாயினும் பின்னதையடைய முன் னதே உறுதுணையாயிருக்கிறது என்று கூறினுல் அது மிகை யாகாது. ஆகவே பின்னவர் உடலினை 96 தத்துவத்திலும், முதல் இரண்டிலும் முப்பது முப்பதாக 60ம் சேர்ந்து இயங்கும். இயக்கும் மூன்ரும் தத்துவம் 36. (ஆதாரம் 6. மண்டலம் 3. மலம் 3. தோஷம் 3. ஏடனை 3. குணம் 3. இராகம் 8. வினை 2. அவத்தை 5.) ஆக இம்முப்பத்தாறும் அறுபதோடும் சேர்ந்து முறையாக இயங்கினுல்தான் நாம் நலமுற வாழ ஏதுவாகும். அவ்வாறு வாழத் தடையாம் கட்டங்கள் பலவாக விரிந்து கிடப்பினும் சிறப்பாக 36 தத்துவம் போன்றதைத் தோத்திரம் சாத்திரமாகிய இருநெறிகளும் வகுத்து உரைக்கின்றன. மேலும் உள்ள 60 தத்துவம் போன்ற தடைகளும் உளவென்பதனை உரைக்காமல் இல்லை யெனினும் சிறப்புடையனவற்றையே

ஈண்டு எடுத்துக் கொள்ளுவோமாக. முதல் முதலில் ஏதவூர்த் தங்காத வாதவூர்ப் பெருந்தகை தாம் செய்த திருவாசகப் போற்றித் திருவகவலில் கூறும் பிழைப்புக் கட்டங்கள் 20யும் கூறிப் பின் சாத்திரப் பகுதிக்குச் செல்வோமாக.

"யானை முதலா எறும்பீருய, ஊனமில் யோனியினுள் வினை பிழைத்தும் மானிடப் பிறப்பினுள் மாதாவுதரத் தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும், ஒரு மதித்தான் றியினிருமையிற் பிழைத்தும், இருமதிவிளைவினொருமையிற் பிழைத்தும், மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும், ஈரிருதிங்களிற் பேரிருள் பிழைத்தும் அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும், ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும், ஏழுதிங்களிற்றாழ் புவி பிழைத்தும், எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும், ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும் தக்க தசமதி தாயொடு தான்படும் துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும். ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை, ஈண்டியும் இருத்தியுமெனைப்பல பிழைத்தும். காலை மலமொடு கடும்பகற் பசிநிசி வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும், கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில், ஒருங்கிய சாயல் நெருங்கி யுண்மதர்த்துக், கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத், தெய்த்திடை வருந்த எழுந்து புடை பரந்து, ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம் கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும், பித்தவுலகர் பெருந்துறைப் பரப்பினுள், மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும், கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும், செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தும், நல்குரவென்னும் தொல்விடம் பிழைத்தும், புல்வரம்பாய பலதுறை பிழைத்தும், (போ. திருவகவல் 11. 47) என்ற முப்பது அடிகளில் கூறிய 20 கட்டங்களைத் தாண்டி வந்து தெய்வம் என்பது பற்றி மனதில் தோன்றி சரியையிற் சரியையைத் தொடக்கி ஞானத்தில் ஞானமாம் பதினறு படிகளைக் கடக்க விழைகின்ற காலத்தே இறைவனை வெறுப்பின்றி விருப்பத்தோடு நினைக்க அங்கே ஆறுகோடி மாயா சத்திகள் தம்தம் தொழிலை நம்மாட்டுத் தொடங்கியதோடு நமக்கு உறுதுணையென இருக்குமவர்களோ நாத்திகத்தைப்பற்றிப் பேசத் தொடங்குகின்றனர். அன்றியும் பழமையாய் வருகின்ற சுற்றமாகிய இனம் அருள் நெறியை நாட வேண்டியது தாழும்

நாடாது நாடும் ஆன்மாவையும் தன்னெறிக்கு (இருள்நெறிக்கு) இழுத்துப் போராடுகின்றது. மேலும் சமயவாதிகளோவெனின் தம்தம் நெறிக்கு இழுக்கத் தலைப்பட சித்தாந்த நெறியைப் பின் பற்றி அந்நெறியே பசுமரத்தாணி யெனப்பற்றி தாம் கொண்ட இறைவன்பால் உள்ள அன்பு மாறாது முதிர்ச்சியடைந்து அகங் குழைந்து அழலதன்முன் மெழுகென உருகி அழுது நின்று திரு வருளைப் பெற்று ஒரு கட்டத்தையும் தாண்டிப் பிறவா நெறி யைப் பெற்றவர்களே பிழைத்தவர்களாவார்கள். ஆதலினால் நாம் கூறும் பிழைத்தோம் என்பதன் பொருளை உணர்ந்து பிழைத்தோம் என்று கூறும் நெறியினைப் பற்றுதல் சாலவும் நன்று. இக்கருத்தினை அடிகளார் அழகும் தெளிவுபட அகவல் 42 வரியில் தொடங்கி முடித்திருக்கின்றார்.

அவ்வகவலை உணர்ந்து ஓதி ஒழுகுவதே உண்மை அறி வுக்கும் பிழைப்புக்கும் உரியதாகும். மேலும் நமது பெருமான் கூறுகின்ற அளவு விரித்துச் சொல்லுதல் எம்போலியர்க்கு இய லாததொன்று. குறைந்த காலத்தில் நிறைந்த கருத்தை எழுத முடியாமையினாலே இக்கட்டுரையின் நிறைவை நோக்கி உறு பயன் பெற்று உய்வார்களென்ற நம்பிக்கை உண்டு.

தோத்திரம் வகுத்த 20 கட்டத்தில் பிழைத்த ஆன்மா சாத்திரம் வகுத்த பதினாறு நெறிகளாம் பேற்றைப் பெரும் பயனாகத் திருத்தாளதனில் தங்கியவர்களே பிழைத்தவர்களா வார்கள். ஆதலால் பிழைக்கும் வழி தெரிந்த பெரியவர்கள் அந் நெறியில் நிற்பவர்கள். அந்நெறியில் நிற்கச் செய்யும் பெரிய வர்கள் தாம் பிழைத்ததோடு எம்போன்ற உயிரினமும் உய்ய உறுதுணை புரிந்து உண்மையை யுணர்த்தும் நெறியில் ஈடு பட்டு அனைவரும் பிழைத்தோம் என்று கூறும் பெரும்பணியை மேற் கொண்டவர்களாதலால் இனியும் பிழைத்தோம் இல்லை என்று வாழ, வருந்தி எங்கும் உயிரினத்திற்குத் தக்கன வற்றைச் செய்ய அமைந்தனவே அரண் ஆலயங்களும் அருமை மடாலயங்களும் போன்றவைகள்.

பிழை தோம் இல்லை

இதனைப்பிழை = குற்றம், தோம் = குற்றம். இல் = இல்லை, ஐ என்ற நான்கு பிரிவாக்கிக் குற்றம் குற்றம் இல்லை என்ற

பொருளைக் காண்கிறோம். இறுதியிலுள்ள ஐ இரண்டாம் வேற்றுமை உருபு. ஈண்டு உடைமைப் பொருளின் கண்ணதாகக் கொண்டு குற்றம் குற்றம் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூற அமைந்ததே இக்கட்டுரையாகும். எடுத்துக் காட்டாக

"அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரனுடைத் தக்கன் செய்த மா வேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாய்த்தே"

என்ற திருவிருத்தத்தில் தக்கன் செய்த புண்ணியச் செயலாம் மாவேள்வி தீயது ஆயிற்று. ஆனால் சண்டேசப் பெருமாள் தன் தாதையை வேதியனைத் தாளைச் சிதைத்த பெரும் பாதகமும் புண்ணியச் செயலானதை உற்று நோக்கி "மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம் ஆனிடத்தைந்து மாடும் அரன் பணிக்காக அன்றோ" என்ற அருணந்தி சிவனார் வாக்கை உணர்ந்து ஒழுகியவர்களே பிழைத்தவர்களாவார்கள். ஏனையவர் இழைக்கும் பணியென்பன யாவும் பிழைக்கும் பணியன்று. மேலும்,

"நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம் புல்லனென்றிவர்கள்
குற்றம் செயினும் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டு நின்குரை கழலடைந்தேன்
பொற்றிரண் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ் திருப்புன் கூருளானே.

என்றும்,

மற்றுநான் பெற்றதார் பெறவல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக்
கொள்ளுங் கொள்கையான் மிகைபல செய்தேன்"

என்று வரும் சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாக்கால் மேற்கூறிய கருத்தையே வலியுறுத்துவதோடு மும்மலக் கட்டினால்

முறைதிரிந்த செயல்களையும் மன்னித்து ஏற்று மகிழ்வோடு அருள் புரியும் கருணைத் தாயுள்ளம் படைத்தவரை கருணைக்கடல் என்று கூறினுல் அதற்குத் தடையென்ன இருக்கிறது? அதற்காக நாமும் செய்ததையே மீண்டும், மீண்டும் செய்து தீமையுறல் கூடாது என்ற மன உறுதியோடு இருந்து, மண், பெண், பொன் இவைகளினுல் வரும் எண்ண அலைகளில் சிறந்து சீர் கெடச் செய்வது பெண்ணுசையாகும். ஆகவே அதனைக் கூற வந்த அருள்வாதவூரர் அடை கொடுத்ததோடு அச்சுறுத்தி அங்கே தான் நாம் மிகவும் கருத்தோடு இருக்க வேண்டுமென்று கூறியது போன்றே ஏனைய பெரியவர்களும் கூறிப் போந்தனர். ஆதலால் முக்கியமாகப் பிழைத்தோம் என்று கூறவேண்டியவன் தமிழ் நாட்டின் பண்பினை மேற்கொள்வாளுனுல் அவன் பிழைத்தோமில்லையே என்று ஏங்க வேண்டிய அவசியமிராது. இக்கருத்தினையே இராமலிங்க அடிகளாரும் தாம் எழுதிய மாலையில்:—

"அடிமை செயப்புகுந்திடு மெம்போல்வார்
குற்றமாயிரமும் பொறுத்தருளும் அரசே"

"அடியனேன் பிழையனைத்தும் பொறுத்தாட்
கொண்ட வருட் கடலே மன்றுளாடும்
அரசேயிந்நாள் கொடியனேன் செய்
பிழையைத் திருவுள்ளத்தே கொள்ளுதியோ
கொண்டு குலங் குறிப்பதுண்டோ"

என்றும்,

"நற்ருயும் பிழைகுறிக்கக் கண்டோ மிந்த
நானிலத்தே மற்றவர் யார் நாடார் வீணே
பற்ருயும் அவர்தமை நாம் பற்ருேம்
பற்றில் பற்ருத பற்றுடையார் பற்றியுள்ளே
உற்ருயுஞ் சிவபெருமான் கருணையொன்றே யுறு
பிழைகளைத் துணையும் பொறுப்பதென்றுன்
பொற்ருளை விரும்பியது மன்றுளாடும் பொருளே
யென்பிழை யனைத்தும் பொறுக்கவன்றே"

(மஹாதேவமாலை 96) அச்சாணியென உரைத்துள்ளார். அது அயன் அரி பிழைகளாயிரமும் பொறுத்து மாலடயை ஒடுக்க

வல்லவன் சிவன். அவனது திருவருளொன்றே மிக்க குற்றங்கள் அத்தனையும் பொறுக்க வல்லது. ஆதலால் அவனது பொன் போன்ற தாளிணையே பற்றுகக்கோடல் பயன் தரத்தக்கதாகும். அவ்வாறன்றி ஏனைய பற்றை நீக்கி, உலகப் பற்றினிற் கூடியிருந்து, அவற்றால் அவதியுறாத பற்றையுடைய ஆன்மாவைப் பற்றி நின்று உள்ளங்களில் பொருந்தி அன்பரது குணங்களை ஆராய்கின்ற சிவபதியாம் நின் திருவடியைத் திருவருளைப் போற்றுகிறோம் என்ற உண்மை உணர்வோடு உழைத்துப் பிழைத்தோம் என்ற மறைப்பும், பிழைத்தோம் இல்லையே என்ற அயர்ச்சியும் நீங்கி நாமும் பிழைத்தோம் என்று கூறத் தக்கனவற்றையே மேற்கொண்டு

பாசக் கிழங்கைப் பற்றிக் களைத் தெறிந்தெம்
நீசத் தொழிலொழிக்கும் நின்மலன்றன் — வாசமலர்
சூட்டித் திருக்கரத்தால் வாக்கதனால் நற்கதியைக்
காட்டும் குறியே குறி — *ஆசிரியர்*

என்னும் குறியையே குறியாக அருமை நெறியாகப் பின் பற்றியவரே பிழைத்தோராவர். இன்றேல் அக் குறியினின்று விலகி தவறிழைத் தோராவர். ஆவதனால் ஆவதறிந்து ஆனேறும் பெம்மாற்கு அடிமையாயிருந்து அயராதுழைத்து அவனடியைப் பெறுதலே சாலச் சிறந்ததும் விழுமியதுமாம்

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

என்பதற்காகச் சாருமிடமும், சார்வான் தன்மையும், சார்வான் பெறும் பயனும் இன்னதென்றறிந்த இன்னலின்று வாழ இறையருள் துணைபுரிய வந்திப் போமாக.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 17, இதழ் 8-ன் தொடர்ச்சி]

III

SUNDARAMURTI SWAMI

(Abbreviated as SUNDARAR)

72. மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

The varying mood of the saint, now joyous and triumphant, now plaintively looking for death, as reflected in the next two verses from one hymn.

72. Linked to naught else in life, my mind thinks only
of Thy holy feet.
I'm born anew, from this time forth I pass the
way of birth no more.
In Kodumudi, lord austere, where wise men Thee
with praises greet,
Should I forget Thee, my own tongue 'Hail,
Siva'! crying, would adore.

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press. Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

மதிப்புரை

"ஸ்ரீ இராமேஸ்வரம் தனுஷ்கோடி" தல வரலாறு.

பாரதநாட்டின் தென்கோடியிலுள்ள தலைசிறந்த தலமாகிய இராமேஸ்வரம் தனுஷ்கோடிக்கு நம் நாட்டவர் மட்டுமின்றி உலகத்திலுள்ள பல்வேறு நாட்டினரும் ஆயிரம் மாயிரமாக நாள் தோறும் தரிசிக்க வருவதால் ஷ புண்ணிய ஸ்தலத்தின் தலவரலாறு வெளியீடு மிகமிக அவசியமே. அஃதில்லாப் பெருங் குறையை திருவுளம்பற்றிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் சென்னை ஸ்ரீ பாலசுப்பிர மணியம் கம்பேனியாரும், ஸ்ரீ குமார் சகோதரர்கள் கம்பேனியாரும் அப்பணியின் பொறுப்பை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டனர். அப்பணியை சிறப்புற நிறைவேற்றித்தர சிவ சிந்தனையும் உயர்ந்த பண்பும், நுண்ணிய அறிவும், அறத்தொண்டில் இடையறு ஆர்வமும் இயற்கையிலமைந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையில் சிறந்த தொண்டாற்றி ஓய்வுபெற்ற முன்னுள் ஆணையாளர் சைவத் திரு. A. உத்தண்டராமபிள்ளை அவர்களும், B.A., B.L., I. A. S. (ரிட்டயர்டு) திருவருள் பாலித்த வண்ணம் வேண்டுதலுக்கிணங்கி ஆசிரியப் பொறுப்பேற்று சிறப்புற பணிபுரிந்துள்ளார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள பழம்பெரு கோவில்களைப் புதுப்பித்தும், கும்பாபிடேக முதலான புனித விழாக்கள் நடாத்தியும், நடைபெறச் செய்தும், மக்களுக்குத் தெய்வீகப் பணியில் ஊக்கமளித்தும் உதவிகள் புரிந்தும், தலவரலாறுகள், ஸ்தலபுராணம், தலமுறைப் பதிகங்கள் அச்சேற்றியும், புதிதாகப் பதிப்பித்தும் மக்களிடையே சமய உணர்வை பரப்புவதற்கானப் பல வழிகள் வகுத்தும் மகாநாடுகள் கூட்டியும் இரவு பகலாய்ச் சலியாது உழைத்து வரும் சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறை

ஆணையாளர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், அவர்கள் B.A., B.L., இப்பதிப்புக்கு அணிந்துரை வழங்கி யுள்ளார்கள். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மூன்று பாஷைகளிலும் தேவஸ்தான வெளியீடாக இப்பதிப்புப் பிரசுரிக்கப் பெற்றுள்ளது.

இத்தலங்களின் தெய்வீகச் சிறப்பு, மூலக்கோயில் வரலாறு, நடைபெறும் திருவிழாக்கள், கோவிலுள்ள தீர்த்தங்கள், யாத்திரிகர்கள் தங்குமிடம் முதலான விபரங்களும் மற்றும் தீவின் அமைப்பு விபரமும் இவ்வெளியீட்டில் தெளிவாகத்தரப் பெற்றுள்ளது. இந்நூலைப் படித்துப்பின் ஆலய வழி பாட்டுக்குச் செல்பவர்கள் மிகவும் பயன் பெறுவார்கள்.

கிடைக்குமிடம் :— ஸ்ரீ இராமநாதசுவாமி தேவஸ்தானம்,
இராமேஸ்வரம்.

தமிழ் பிரதி ஒன்றின் விலை 0–40 ந.பை.

ஆங்கிலமும், ஹிந்தியும்கூடிய பிரதி ஒன்றின் விலை 0–50 ந.பை.

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு.

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ. 1–50,

ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடங்கள் :–

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

மதிப்புரை

தொல்காப்பியச் சொல்லதிகாரம் (சேனாவரையம்)

விளக்கவுரை

ஆசிரியர்
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி — திருப்பனந்தாள்.

தொல்காப்பியச் சொல்லதிகாரம் வளம்பல செறிந்து தமிழின் ஆற்றலுக்கோர் அளவெனத் திகழ்வதாகும். அதற் கமைந்த சேனாவரையரின் உரை ஆனாப் பெருமை பல உடைய தாகும். திரு. சுந்தரமூர்த்தி அவர்களின் புலமை இன்று அதற்கோர் விளக்க உரை தந்திருக்கிறது.

சொல்லதிகாரத்தின் பல்வேறு உரைகளையும் தேர்ந்து, மொழியின் முற்போதைய, தற்போதைய நிலைகளையும் மனதிற் கொண்டு, தொல்காப்பியத்தின் அழகு மேலும் வெளிப்படுமாறு ஆக்கப்பட்டிருக்கிற இவ் விளக்க உரை, ஆசிரியரின் ஆழ்ந்த ஆய்வினையும், அதனைப் பல்காலும் பாடஞ்சொன்ன அனுபவப் புலமையினையும் காட்டி நிற்கின்றது.

நூலின் முற்பகுதியில் காணப்படும் ஆராய்ச்சி முன்னு ரையும் அதிகார விளக்கக் கட்டுரைகளும், தொல்காப்பியத்தில் விருப்புடையோர் அனைவருக்கும் இனிப்பதாகும். இறுதியில் ஆசிரியர் சேர்த்துள்ள விளக்க உரைகளும், வினாக்களும் தமிழ் இலக்கண மாணாக்கர்கட்குப் பெரும்பயன் அளிப்பன.

தொல்காப்பியர், சேனாவரையர், பற்றி ஆசிரியர் கூறி யுள்ள கருத்துக்கள். அவரது பாராட்டத்தக்கப் பொறுப்புணர்ச்சி யினையும், புதிய உலகத்தின் உண்மைச் சிந்தனையில் அவர் கொண்டிருக்கும் நம்பிக்கையினையும் தெளிவுற விளக்கிக் காட்டுவதாகும்.

அழகுக்கு அழகு செய்தாற் போன்று இவ்வெளியீடு பனசை, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆசியுரையையும் பெற்றுத் திகழும் பாக்கியமும் பெற்றுளது. இவ் விளக்க உரைப் பதிப்பு அச்சிடுதல், எழுத்தமைப்பு, கட்டுமானம், தாள் சம்பந்தப்பட்ட வகைகளிலும் ஒரு சில மாறுதல்களை மேற் கொண்டிருப்பின் நூலின் அகமே போலப் புறமும் சிறந்திருக்க வழியுண்டு.

நூலின் விலை ரூபாய் எட்டு.

கிடைக்குமிடம் :—

பேராசிரியர், கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தெற்குத் தெரு,
திருப்பனந்தாள் அஞ்சல்.
(தஞ்சை. மாவட்டம்)

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

அகத்தியர் தேவாரத்திரட்டு

புதிய பதிப்பு

விசுவாவசு ஆண்டு ஆவணி மூல வெளியீடு

99+19=118 பக்கம் வெள்ளைத்தாள்

அகத்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு, குறிப்புரைகள் ஆகியவை, அடங்கியது.

தனிப் பிரதி அடக்க விலை ரூ. 0-36.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு. தபால் கட்டணம் வேறு.

கிடைக்குமிடங்கள்:—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்
ஸ்ரீவைகுண்டம். *(திருநெல்வேலி ஜில்லா)*
2. “ தியாகராச விலாசம் ”
பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

உ
சிவ சிவ

இராமேசுவரத்தில்
விபூதிக் கட்டளை சேமவைப்பு ரூ. 2,000/-

'கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான சிவனடி சேர்வீரே'

என்பது சிவசின்னமாகிய விபூதி தரித்தலின் பெருமையைக் கூறும் திருமந்திரம் ஆகும்.

'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர்வாய் உமைபங்கன் திருவால வாயான் திருநீறே'

என்ற தொடக்கத்தையுடைய திருநீற்றுத் திருப்பதிகத்தில் விபூதியின் பெருமை ஞானசம்பந்தரால் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

விபூதியைத் தரித்த அடியார்களைக் காணின் சிவன் எனவே நினைத்து வணங்கப் பெறும் என்பதை,

'எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டா லுள்கி
உவராதே அவரவரைக் கண்ட போதும்
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே'

என்ற திருநாவுக்கரசரது தாண்டகத்தானுணரலாம்.

ஏனாதி நாதநாயனார், தன்பகைவன் நெற்றியில் விபூதியை நோக்கி அப்பகைவன் தன் கருத்தே முற்றும்படி நின்றார்.

மெய்ப்பொருள் நாயனரும் 'மெய்த்தவவேடமே மெய்ப் பொருள்' என்றிருந்தவர்; அவர் முத்தநாதனல் வீழ்த்தப் பட்டபோழ்தும் 'பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீர்' என்று பணித்தார்.

தில்லைவாழ்ந்தணர் 'உறுவது நீற்றின் செல்வம் எனக் கொளும் உள்ளம் மிக்கவர்' ஆவார்.

திருக்கூட்டச்சிறப்புக்கூறுங்கால் 'பூசுநீறுபோல் உள் ளும் புனிதர்கள்' என்று கூறு முகத்தான் திருநீற்றின் புனிதத் தன்மையைச் சேக்கிழார் குறித்துள்ளார்.

சிவநெறியானது 'வாய்மைவேதநன்மைத் திருநீற்றுயர் நன்னெறி' என்றும், மூர்த்தியாரும் 'வையம் முறைசெய்வே னுகில் வயங்குநீறே செய்யும் அபிடேகமும் ஆக' என்று கூறினுர் என்று மூர்த்திநாயனுர் புராணத்துக்கூறப்பெற்றன.

உவரின்பொதி சுமந்து வந்த வண்ணனின் மேனிமேல் உவர்மண் ஊறி வெளுத்திருந்த நிலையைக்கண்டு முழுநீறு பூசிய திருமேனியெனவே கொண்டு கழறிற்றறிவார் நாயனுர் வணங்கிய செயல், திருநீற்றின் வாரவேடத்திடத்திருந்த பக்தியை நன்கு விளக்கும்.

விபூதியில் கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்று மூன்று வகையுண்டு.

கன்றின் யீன்றணிமை யுடையதும் நோயில்லாததும் ஆகிய பசுவின் சாணத்தைச் சத்தியோசாத மந்திரம் கூறிக் கையில் ஏற்றுக் கோசலம் விட்டுப் பிசைந்து உலர்த்திச் சிவ மந்திரங்கொண்டு உண்டாக்கப்பட்ட சிவாக்கினியாகிய ஓமத் தீயில் சிவபெருமானுடைய திருவடிகளை நினைத்து இட்டுத் தகித்து எடுத்த தூய திருநீறு கற்பவிபூதி எனப் பெறும்.

காட்டில் உலர்ந்து கிடக்கும் பசுச்சாணத்தைக்கொணர்ந்து நுண்ணிய பொடியாக்கிப் கோசலம் விட்டுப் பிசைந்து அத்திர மந்திரத்தினலே உருண்டையாகப் பிடித்து உலர்த்தி ஓமத் தீயில் இட்டு வெந்தபின் கைக்கொள்ளும் செல்வத் திருநீறு அநு கற்ப விபூதி என்று வழங்கப்பெறும்.

பசுக்கள் மேயும் காட்டில் மரங்கள் பற்றி எரிந்து வெந்த நீறும் பசுக்களின் சாணம் இருக்குமிடங்கள் தீப்பற்றிக் கொள்ள வெந்த நீறும், செங்கற்கள் சுட்ட தீயில் உண்டாகிய நீறும் ஆகிய இவற்றைத் தனித்தனியே கோசலம் விட்டுப் பிசைந்து உருண்டை செய்து உலர்த்தித் திருமடங்களில் விளங்கும் சிவாக்கினியில் விதிப்படி தகித்து எடுத்த திருநீறு உப கற்ப விபூதி எனப் பெறும்.

இத்தகைய திருநீற்றை முறைப்படி தயாரித்துப் பின் 3–வது பாராவில் கண்ட வண்ணம் இராமேசுவரம் இராமநாத சுவாமி ஆலயத்துக்கு மாதந்தோறும் அளிக்கும் சிவ சீல முடையார்க்கு உதவியளித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது இராமே சுவரத்தில் விபூதிக் கட்டளை நிதி எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 2000/– (ரூபா இரண்டாயிரம்) இது ஆண்டொன்றுக்கு 7–1/2% வட்டி தரக்கூடிய நிலையான முதலீடாகக் கும்பகோணம் கானரா பாங்கில் பத்து வருஷ காலத்துக்கு முதலீடு செய்யப் பெற்றுள்ளது. பிக்சட் டிபாஸிட் இரசீதுநெ. 489058 $\frac{108}{66}$A. இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

3. அ. இராமேசுவரம் இராமநாதசுவாமி ஆலயத்துக்கு மாதந்தோறும் விபூதி முறைப்படி தயாரித்து அளிக்கும் ஒருவர்க்கு ஊதியம் அளித்தற்பொருட்டு இச்சேமவைப்பினின்று கிடைக்கும் வட்டித்தொகை செலவு செய்யப் பெற்று வரும்.

ஆ. ஷை விபூதி தயாரிப்பவர் சைவ பரம்பரையில் தோன்றிச் சைவசீலம் சைவானுட்டானம் உடையவராய் இருத்தல் வேண்டும். அவர் தேவாரம் ஓதும் ஓதுவராக இருப்பது சிறப்புடையதாகும். அல்லது வேதம் வல்லவராய்ச் சைவ அநுட்டானங்களைக் கடைப்பிடித்து ஒழுகும் அந்தணர் ஆக இருப்பின் சாலச் சிறந்ததாகும்.

இ. ஷ தகுதியுடையவர் உரிய காலங்களில் சாஸ்திரோக்த மாக விபூதியைத் தயாரித்து மாதந்தோறும் இராமேசுவரம் இராமநாதசுவாமி ஆலயத்திற்கு அளித்து, அளித்ததற்கு அத்தாட்சியாக ஷ கோவில் நிர்வாக அதிகாரியிடம் இருந்து மாதக் கடைசியில் சான்றிதழ் பெற்று நமக்கு அனுப்பினுல் ஷ விபூதி அளித்த சிலருக்கு விபூதி தயார் செய்து அளித்த மைக்காக ரூ. 10/– மணியார்டர் அனுப்புவிக்கப் பெறும்.

ஈ. மேலே குறித்தவண்ணம் விபூதி அளிக்கும் தகுதியுள்ள சைவ சீலமுள்ள ஓதுவார் அல்லது வேதமோதும் அந்தணர்க்கு மட்டும் இவ்வுதவித் தொகை அளிக்கப்பெறும். தகுதி இல்லாத வருக்கு ஷ உதவித் தொகை அளிக்கப் பெறமாட்டாது.

4. அ. இச் சேமவைப்பினின்று ஆண்டுதோறும் கிடைக் கும்வட்டித் தொகையில் நிர்வாகச் செலவுபோக எஞ்சிய தொகையே விபூதி உதவித் தொகையாக அளிக்கப்பெற்றுவரும்.

ஆ. எந்த மாதம் அல்லது மாதங்களாவது ஷ கட்டுப் பாடுகளின்படி விபூதி உதவித் தொகை அளிக்கப்பெருமல் போனுல் அளிக்கப்பெருத மீதித் தொகை இராமேசுவரத்தில் நமது காசிமடத்தில் நாடோறும் நடத்தப்பெற்று வரும் பிரா மண போஜனத்தோடு நம்மால் குறிப்பிடப்பெறும் ஒரு நன் ஞளில் அதிகப்படி பிராமண போஜனம் அளிக்கப்பயன்படுத்தப் பெறும்.

இ. வட்டி வரவுக்கேற்ப விபூதி உதவித் தொகை குறைக்கவும் கூட்டவும் பெறும்.

5. ஷ வட்டி வருமானம் வேறு எந்தமுறையிலும் செல விடப்பெறமாட்டாது. ஷ சேமவைப்புத் தொகை திரும்பப் பெற்றதும் அதிக வட்டி பெறக்கூடிய முதலீடுகளில் முதலீடு செய்யப்பெறும். இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

Tirupanandal
Dated 15-7-1966 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office as No. 44 of 1966 of Book No. 4 volume, 53 pages 183 - 185 dated 18-7-66.